பக்கங்கள் பத்து

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/.

சுடர்: 3 யாழ்பாணம் விபவ ஹு ஐப்பசி மீ 05 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 09 (21 – 10 – 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 215

மங்கள வைபவங்களுக் கேற்ப, உடுபுடைவைகள்

RASL

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

★ காஞ்சிபுரம்
★ பெனுரிஸ்
★ செவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்.
மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

## தென் இலங்கையில்

# இராணுவ நடவடிக்கைகள் ஒருவாரத்துக்கு நிறுத்தம்

## அரசு முடிவு எடுத்திருப்பதாக அமைச்சர் லலித் தகவல்

கொழுப்பு, அக்டோபர் 21

தெற்கில் ஜே வி பிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் ஒரு வார காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்படும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் விதமாகவே அரசாங்கப இந்த முடிவை எடுத்திருக்கிறது.

ஆனுல் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படும், சட்டத்தையும் ஒழுங்கையும் மீறுவோருக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கையை மேற்கொள்ளத் தவருது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று அமைச்சில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:—

20ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு ஜே. வி, பிக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டா.

ஒருவார காலத்தின் பிறகு அரசாங்கம் அதனை மீளாய்வு செய்யும்

இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டதை அடுத்து அரசாங்கத்துக்கு எவ்வளவு சாதகமான பலா பலன்கள் கிடைக்கின்றனவோ அவற்றை அடிப்படையாகவைத்து இந்த இடைநிறுத்தம் மீளாய்வு செய்யப்படும்.

இதேவேளையில் தடுப்பு முகாம்களில் உள்ளவர்களைத் துரிதமாக விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும்.

குற்றபத்திரிகைகள் வழங்கப்பட்டவர்கள் மீது வழக்கு விசாரணைகளைத் துரிதமாக்குவதற்கும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-ஐ)

முச்சந்தி முரளி



தெற்கிலே நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. அதுதான் புதுக்கதை விடுகிருர்...!!

## பங்களாதேஷில் சூருவளி

டாக்கா அக் 21

பங்களாதேஷில் நேற்று வீசிய சூருவளியில் நூற்றுக்கும் அதிகமானேர் காணுமற் போய் விட்டனா என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## இன்று நல்லூரில் உண்ணுவிரதம்

யாழ்ப்பாணம், அக். 21

நல்லூரில் இன்று (வெள்ளிக்கிழமை) ஆரபபமாகும் சுழற்சி முறையிலான உண்ணுவிரதத்தில் பங்குபற்ற சகல விடுவிக்கப்பட்ட கைதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 9-00 மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்மன்கோயில் முன்றலுக்கு வரும்படி இதனை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மை விடுதலை செய்யக்கோரி பூஸாக் கைதிகள் நடத்திவரும்சாகும் வரை போராட்டத்துக்கு ஆதரவாக நடைபெற்றில் சுழற்சிமுறையில் இந்த உண்ணுவிரதம ஆரம்பமாகிறது. (ஓ-ஐ)

## யாழ்ப்பாணம் சுகாதார திணைக்களத்துக்கு ஜீப், அம்புலன்ஸ்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், அக் 21

யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்குத் தேவையான அம்புலன்ஸ்கள் ஜீப்புகள் ஐ நா உயர்ஸ்தானிகராலயத்தினுல் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் யாழ் மாவட்ட வைத்தியசாலைகளில் இருந்த வாகனப் பற்றுக்குறை ஓரளவு நிவாத்தி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அத்தியட்சகர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தினுல் சுகாதார அமைச்சின் ஊடாக இந்த வாகனங்கள் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டன,

நான்கு அம்புலன்ஸ்களும், ஆறு ஜீப்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அம்புலன்ஸ்கள் பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி பளை ஆகிய ஆஸ்பத்திரிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை சங்கானை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளுக்கும் அம்புலன்ஸ்கள் கிடைக்கவுள்ளன

ஜீப்புகள் ஐந்து மருத்துவ சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கப்படவுள்ளன. (ஓ-10)

## யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு இன்று சம்பளக் காசோலைகள்

யாழ் மாவட்ட ஆசிரியர்களின் சம்பளக் காசோலைகள் இன்று யாழ் கல்வித்திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட உள்ளன.

இத்தகவலை யாழ். கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் திரு. ஆர். சுகுணதிரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கல்வித் திணைக்களம் கடந்த சில தினங்களாக மூடப்பட்டிருந்ததால் இம்மாதசம்பளக்கொடுப்பனவுகள் தாமதிக்கலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

திணைக்கள ஊழியர்கள் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியை அடுத்து இம்மாதச் சம்பளக் காசோலைகள் இன்று வெள்ளிக்கிழமை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனஎன்றும் அவர் தெரிவித்தார். (ஓ-9)

## சாவகச்சேரியில் நேற்று இடம் பெற்ற தாக்குதல்

யாழ்ப்பாணம், அக் 21

நேற்றுக்காலை சாவகச்சேரியில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

சாவகச்சேரி நவீன சந்தைக்குப் பின்புறமாக தனங்கிளப்பு வீதியில் உள்ள ஒரு கட்டிடத்தின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

நேற்றுக்காலை 6.15 மணியளவில் வாகனம் ஒன்றில் வந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தாக்குதலின் போது பாரிய சத்தம் ஒன்று முதலில் கேட்டதாகவும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகச் சத்தங்கள் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதில் சிலர் கொல்லப்பட்டனர் என்றும் சிலர் காயம் அடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று சாவகச்சேரி சந்தை நாள் ஆகையால் இந்தச் சத்தங்களை அடுத்து அங்கு பதற்றம்

(10ஆம் பக்கம் பார்க்க]

### 15, 18 இல் வந்த அகதிகளுக்கு

## 23 - 24 ஆம் திகதிகளில் விண்ணப்பப் படிவங்கள்

### செயலகத்தில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், அக் 21

இம்மாதம் 15 ஆம் 18 ஆம் திகதிகளில் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் காங்கேசன் இறங்குதுறையில் வந்து இறங்கிய அகதிகளுக்கு உதவி கோரும் படிவங்கள் வழங்கப்பட உள்ளன,

இலங்கை அரசினுல் வழங்கப்படும் அகதிகள் அடையாள அட்டையும் இவர்களுக்கு வழங்கப்படும்.

அகதிகள் குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்கான படியும் —

அகதிகள் குடும்பங்க

[10ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

21 - 10 - 1988
ஐப்பசி - 05
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6-02 முதல் 7-32 வரை
ராகுகாலம்;-
10-32முதல் 12-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

## நிவாரணப் படிவம் இறுதி விநியோகம் இன்று முதல்

யாழ்ப்பாணம் அக் 21

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினுல் வழங்கப்படும் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரண திட்டப்படிவங்கள் இறுதி விநியோகம் இன்று முதல் மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்பட உள்ளன.

இன்று 21 ஆம் திகதி அரியாலை கிழக்கு, மேற்கு, மத்தி ஆகிய பகுதிகளில் வதிபவர்களுக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும்

நலலூர் வடக்கு, தெற்கு. திருநெல்வேலி கிழக்கு மேற்கு, கோண்டாவில் மேற்கு, கிழக்கு, ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு திருநெல்வேலி விவசாய பாட

(10ஆம் பக்கம் பார்க்க]

## செய்திச் சாரம்

### முல்லைத்தீவு- கொழும்பு பஸ் 28 முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 21

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் முல்லைத்தீவுசாலை எதிர்வரும் 28ஆம் திகதி முதல் கொழும்புக்கான சேவை ஒன்றை ஆரம்பிக்க உள்ளது

இந்தச் சேவை ஒருநாள் முல்லைத்தீவிலிருந்தும், மறுநாள் கொழும்பிலிருந்துமாக ஒன்று விட்டு ஒருநாள் நடத்தப்படும்.

மாங்குளம் ஊடான இச்சேவைக்கு 75 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

முல்லைத்தீவு, தண்ணீரூற்று ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய இடங்களில் ஆசனப்பதிவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட உள்ளன. (ஓ-க-9)

### முல்லைத்தீவில் அடையாள உண்ணுவிரதம்

முல்லைத்தீவு, அக் 21

முல்லைத்திவு மாவட்ட அன்னையர் முன்னணியினர் கடந்த திங்கட்கிழமை முல்லைத்திவு சச்சேரிக்கு முன்னுல் ஒருநாள் அடையாள உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர்,

''பூசா மற்றும் சிறைகளில் வாடும் இளைஞர்களை உடன் விடுதலை செய்'' போன்ற சுலோக அட்டைகளை உண்ணுவிரதிகள் தாங்கியிருந்தனர். (ஓ-92)

### இரவு ரயில் இல்லை

கொழும்பு, அக். 21

பதுளைக்கான இரவு நேர தபால் ரயில்சேவை ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது, (ஓ-எ)

### பெண் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், அக் 21

பெண் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுக் காலை உரும்பராய்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப் பட்டிருக்கிறது. (ஓ 72-10)

### இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், அக் 21

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடியில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த புதன்கிழமை இரவு இவர் சுட்டுக் கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறது. (ஓ-10)

### நெல்லியடி இலங்கை வங்கியில் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், அக் 21

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் சடந்த 19 ஆம் திகதி (புதன்கிழமை) முதல் பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சாவகச்சேரி, மானிப்பாய் ஆகிய பகுதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளிலும் விரைவில் பணம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி உதயனுக்குத் தெரிவித்தார். (ஓ-ஐ)

### இரத்தம் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், அக். 21

யாழ் போதனு வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவில் 'ஓ' பிரிவு பொசிடிவ் வகை இரத்தம் பற்ருக்குறையாக உள்ளது.

இந்த வகையைச் சேர்ந்தவர்கள் இரத்த தானம் செய்து உதவும்படி போதனு வைத்தியசாலை வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ஓ-5)

### யாழ், செயலகம் இயங்குகிறது

யாழ்ப்பாணம் அக் 21

யாழ் செயலகம் நேற்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்தது.

விஜயதசமியை முன்னிட்டு நேற்று திறக்கப்பட்ட செயலகம் தொடர்ந்து இயங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆயினும் நேற்று வழமையான சடமைகள் எதுவும்நடைபெறவில்லை என்றும்-இன்று முதல் வழமையான அத்தியாவசிய சேவைப் பிரிவுகள் மட்டும் இயங்கும் என்றும்-செயலக அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். ஓ-9)

### தென்பகுதியில் ஊர்வலத்துக்கு ஏற்பாடு

கொழும்பு அக் 21

எதிர்வரும் 25 ஆம் திகதி ஜே வி பி. இயக்கத்தினர் நாட்டின் தென்பகுதியில் ஊர்வலம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர், (ஓ-ஐ)

### ஹர்த்தாலுக்கு அழைப்பு

இன்று வெள்ளிக்கிழமை சுன்னுகம் அளவெட்டி, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், உடுவில் மருதனுமடம் சங்குவேலி ஆகிய இடங்களில்பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க மாணவர் ஒருங்கிணைப்புக்குழு அழைப்பு விடுத்துள்ளது,

கடந்த 17 ஆம் திகதி சித்தன்கேணியில் இராணுவத்துடன் இடம் பெற்ற நேரடி மோதலில் மரணம் அடைந்த லெப். அருணுக்கு (பிரேமச்சந்திரன் - மானிப்பாய்) அஞ்சலி செலுத்து முகமாகவே இந்தஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக மாணவர் ஒருங்கிணைப்புக்குழு அறிவித்திருக்கிறது.

## செய்திச் சாரம்

### சுன்னுகத்தில் வங்கிகள் ஸ்தம்பிதம்

சுன்னுகம் அக் 21

சுன்னுகம் மக்கள் வங்கி கடந்த புதன் கிழமை முதல் இயங்கவில்லை.

பாதுகாப்பு வழங்கிய இந்திய படையினர் புதன்கிழமை வங்கிகளுக்குவராததால் மக்கள் வங்கிமூடப்பட்டிருந்தது

இலங்கை வங்கியும் பணக்கொடுக்கல் வாங்கல்களை பாதுகாப்பு இன்மையால் நிறுத்தி இருந்தது. காசோலைகள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (ஓ-27)

### விஜயதசமி சிறப்பாக நடந்தது

யாழ்ப்பாணம், அக். 21

யாழ்ப்பாணம் எங்கும் நேற்று விஜயதசமி விழா சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலைகள், இல்லங்கள், சனசமூகநிலையங்கள், அரச, தனியார் அலுவலகங்கள் ஆகியவற்றிலும் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. (ஓ-10)

### பஸ்நிலையத்திலும் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் அக் 21

யாழ் - பஸ்நிலயத்தில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த மரியதாஸ் கோகுலவாசன் (வயது 20) என்பவரே மரணமானவராவர்

நேற்றுக்காலை ஆறுமணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது. (ஓ-10)

### கற்சிலைமடுவில் சுற்றிவளைப்பு

ஒட்டுசுட்டான், அக் 21

முத்துஐயன்கட்டு இந்தியப்படை முகாமிலிருந்து திடீரென வெளியேறிய படையினர் கற்சிலைமடுச் சந்தியைச் சுற்றி வளைத்தனர். ஐவரை அவர்கள் முகாமிற்குக் கூட்டிச் சென்றனர்.

இச்சம்பவம் புதன் கிழமை காலை இடம் பெற்றது. (ஓ-113)

### பல்கலைக்கழக மாணவரின் நினைவுக்கூட்டம்

யாழ் பாணம் அக் 21

கடந்த வருடம் அக்டோபரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மரணமடைந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நினைவுதினக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

பிரஸ்தாப கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் பல்கலைக்கழக

[10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, Hall set மேசை, Show case Type-writter கண்ணாடி மேசை Black & Decker Drill Pram Stainless Steel Zink சட்டில், மெத்தைகள் Pressure Cooker மற்றும் பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (7371)

கேரதீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனான வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K. அரியராசா நாவற்குழி கிழக்கு (மாகவித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு K. அரியராசா, 302, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (7361)

### மலிவு விற்பனை

தேக்கினாலான அலுமாரிகள் 8' நீளமான ஷோகேஸ் 3 Piece Mirror Dressing Table, Kenwood Chef with Attachments. Kenwood Cooler with Oven மற்றும் சில வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மட்டும்பார்வையிடலாம். யுகேந்திரன், 83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி. (7075)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

### வீடியோ கமெராக்களும், டெக்குகளும் விற்பனைக்கு

J V. C. [Title]. Sony National G' 100, கமெராக்களும், National 180 100 Orion டெக்குகளும் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- தி சிவநாதன் சேகர் றெக்கோடிங் பார், நெல்லியடி. (7228)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம் (6988)

Golden Comet பிறவண் படடுக குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisey பிறவுண் படடுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், 3 1/2 மாத பேட்டுக் குஞ்சுகள் வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும் முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரப்படி லேன், கொக்குவில் (7231)

எம்மிடம் ஒருநாள் "கிறிஸ்டோபர் பாம்" புறொயிலர் குஞ்சு 16/-க்கும் 5 நாள் 'இன்டிமன் றிவர்" புறொயிலர்க் குஞ்சு 16/50க்கும் கைவசம் உண்டு. No. 45 கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். "லீலாபதி" கண்டி தி. மிருசுவில். (7370) வீ

### தாரா, கோழிக்குஞ்சுகள்

ஒரு நாள் சறுப்பு சேவல்குஞ்சுகள் 27ஆம் திகதியும கைபுறே இன்டியன்றிவர் புறயிலா குஞ்சுகள் 28ஆம் திகதியும் கைலேன் சறுப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் 1-11-88இல் விநியோகிக்கப்படும். தாராக்குஞ்சு விநியோகம் பின்னர் அறிவிக்கப்படும் கால்நடை வளர்ப்போர் சங்கம், சுன்னாகம் கிளை, (பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் காரியாலயம்) சுன்னாகம். (7353)

### தாரா குஞ்சு விநியோகம்

போக்குரவத்து சீரின்மையால் 14 ஆம் திகதி தாராகுஞ்சு விநியோகிக்கப்படவில்லை, சிரமத்திற்கு வருந்துகின்றோம். முற்பணம் செலுத்தியவர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அடுத்த விநியோகம் பின்னர் அறிவிக்கப்படும். கால்நடை வளர்போர் சங்கம், சுன்னாகம் கிளை. (7354)

### தவறிவிட்டது

மகாலிங்கம் கேதீஸ்வரி 506974674 V இலக்கமுடையதும், கனகரட்னம் பத்மாவதி 417490108 V இலக்கமுடைய அடையாள அட்டைகளும் வங்கி புத்தகமும் 19 10 88 அன்று திருநெல்வேலிக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பிரயாணம் செய்யும் போது மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V. T. மகாலிங்கம், நாமகள் லேன், கொக்குவில் கிழக்குஎன்னும்விலாசத்தில் தொடர்புகொள்ளவும். (7369)

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

யாழ். குடாநாட்டிலுள்ள பிரபல பாடசாலைகளில் ஆண்டு 6 அனுமதிப் பரீட்சையில் சித்தி பெறுவதற்குரிய மாதிரிப் பயிற்சி (தமிழ்/கணிதம்) 8 வினாத்தாள்களைக் கொண்டது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல புத்தகசாலைகளிலும் புதிய கல்வி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம் (7227)

### A/L இரசாயனம்

108, Brown Road, A/L 89, இரசாயனம் ஆசிரியர் சதீஸ். ஆரம்பம் 23-10-88 ஞாயிறு 3. 15 p.m சனி, ஞாயிறு 3 . 15 to 5. 45 p . m, 3 . 15 to 4. 15 p. m பௌதிக இரசாயனம் 4 . 15 to 5. 45 p. m பொது இரசாயனம், சேதன இரசாயனம். (7230)

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் பாடக் கைநூல் வெளிவந்துவிட்டது யாழ் மாவட்டத்தின் முன்னணிப் புத்தகசாலைகளில் கிடைக்கும். ஆக்கியோன்; ஆ. ந. இராசேந்திரன். விலை ரூ - 40/- (7302)

---

யாழ்/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

## ஆண்டு 6 பிரவேசப் பரீட்சை 1989

விண்ணப்பங்கள் முடிவுத்திகதி 05-11-1988 கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மு. இராமலிங்கம்,
அதிபர்.
(7511)

---

## மாக்கண்டு சுவாமிகளின் 60ஆவது ஜெயந்தி விழா



மேற்படி விழா அன்னாரின் மானிப்பாய் இல்லத்தில் 21-10-1988அன்று காலை கொண்டாடப்படும். அத்தருணம் அடியார்கள் அனைவரும் கலந்து, அவர்களின் அருள் பெற்று ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

திருமுருகன் அருள்நிலையம்
முருகன் அடியார்கள்.
(7368)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யோசப் மேவின்
1967 - 7 - 23



ஜெனுதிரேஸ்
1973 - 03 - 05



ஜெயகுமாரி அஞ்சலினு
1974 - 10 - 01



அ. நொய்லின்
197? - 06 - 02



செ. றேனுகா
1979 - 08 - 20

## அநியாய அழிப்பு: 21-10-1987

ஆண்டொன் ருனாலும் ஆறுது எம்துயர்
பாண்டுநீர் போனாலும் தீராது எம்கவலை
காணும் இடமெல்லாம் உங்கள் நினைவலைகள்
கண்ணை மூடிவிட்டால் தீராத கனவுகள்
ஒருவர் இருவரா ஐவராக மறைந்துவிட்டீர்
கருத்தினில் மகிழ்வில்லை மனதில் நிம்மதியில்லை
கர்த்தர் காத்திடுவார், பரகதி சேர்த்திடுவார்
தப்பாது வேண்டுகிறோம் கதியிழந்த நாமெல்லாம்.

பெற்றோர், உற்றார், உடன்பிறப்புக்கள், நண்பர்கள்

சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(7365)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



சூ. அந்தோனிப்பிள்ளை சேனுதிராசா

தோற்றம்: 21 04 - 1940 மறைவு: 21 - 10 - 1987

பாசமாய் எமை வளர்த்த
நேசமுள்ள தந்தையாரே
ஈசனடி சேர்ந்தீரோ
எமை விட்டு
ஆசையாய் நாம் எல்லோரும்
அப்பா என்றழைத்து
நேசமாய் இருந்தோமே
எம்மைப் பரிதவிக்க விட்டீரே.

உமது ஆத்மா சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

38, பீச் றோட்,
குருநகர்.
(7364)

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வத்துரை மகேஸ்வரி

தோற்றம்: 1918- 08- 01 மறைவு: 1987- 11- 01

திதி: 1988- 10- 21

பாசத்துடன் எம்மை வளர்த்து நல்வழியில் காத்திட்ட எம் அருமைத் தாயே ஓராண்டு சென்றிடினும் உங்கள் நினைவு எம் உள்ளத்தில் நின்று நீங்காதம்மா.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஜெயவாசா
இமையாணன்,
உடுப்பிட்டி.
(7288)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முத்தன் கதிரவேலு

தோற்றம்: 5-6-1922 மறைவு: 21-11-1987

திதி: 21-10-1988

ஐயா! அன்பாய் பண்பாய் பாசமாய் எம்முடன் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த அன்பின் சுடரே! உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது ஐயா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இத்தினத்தில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி பிள்ளைகள்,
மருமக்கள், பேரப் பிள்ளைகள்,

கோண்டாவில் வடக்கு
வீர பத்திரகாளி வீதி
கோண்டாவில்.
(7508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் மாவட்டத்தில்
# 1,758 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்

யாழ்ப்பாணம், அக்.21 வீடமைப்பு அதிகார சபையின் நகர வீடமைப்பு திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மொத்தம் 1758 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மொத்தம் பதினைந்தாயிரம் ரூபா வீடமைப்புக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது

1985ஆம் ஆண்டில் 475 குடும்பங்களுக்கும் 1986 ஆம் ஆண்டில் 893 குடும்பங்களுக்கும், 1987 ஆம் ஆண்டில் 268 குடும்பங்களுக்கும், 1988 ஆம் ஆண்டு இன்று வரை 122 குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமிய சுய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மொத்தம் 2, 908 குடும்பங்களுக்கு யாழ் மாவட்டத்தில் வீடமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கிறது,

இந்த திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்துக்கு ஏழாயிரத்து ஐநூறு ரூபா வீடமைப்புக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

1984 ஆம் ஆண்டில் 1, 250 குடும்பங்களுக்கும் 1985 ஆம் ஆண்டில் 693 குடும்பங்களுக்கும், 1986 ஆம் ஆண்டில் 947 குடும்பங்களுக்கும் 1988 ஆம் ஆண்டு இன்றுவரை 18 குடும்பங்களுக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது

இந்தத் திட்டத்தின் கீழ் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜம் ஊடாக 1987 ஆண்டு மொத்தம் 637 குடும்பங்களுக்கும் வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ)

ஓம்
விராட் விஸ்வப்பிரம்மனே நம

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விபவ ஸ்ரீ ஐப்பசி மாதம் 7ஆம் திகதி (23-10-1988) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-00 மணிமுதல் 10-00 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில்,

| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
|---|---|
| **டென்மார்க் (தளபதி)** | **சாவித்திரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருமணவிழா திருவருள் நலத்தினல் மாதனை காளி அம்மன் கோவிலில் இனிது நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ கொண்டாட்டம் 3 நாட்கள்வரை நடைபெறும். ★

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| த. சண்முகலிங்கமும் பாரியாரும் (நகைத்தொழில், நல்லூர்) கைதடி மத்தி, கைதடி. | மு. கந்தசாமியும் பாரியாரும் க. மாணிக்கவாசகரும் பாரியாரும் (சிறிய தந்தை-தாய்) புலோலி கிழக்கு, மாதனை. |

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை. இருவீட்டார் அழைப்பு)
(7296)


# IMMEDIATE VACANCIES
## IN SAUDI ARABIA

(1) Mechanical Engineer இயந்திரப் பொறியியலாளர் — Negotiable
(2) Electrical Supervisor மின்சார மேற்பார்வையாளர் — Negotiable
(3) Mechanical Supervisor இயந்திரவியல் மேற்பார்வையாளர் — Negotiable
(4) Plumber குழாய் பொருத்துநர் — Negotiable
(5) Boiler Technician — Negotiable
(6) Maintenance Cleaners பராமரிப்பு சுத்திகரிப்பாளர் — 450 S. R.
(7) University Cleaners கலாசாலை சுத்திகரிப்பாளர் — 456 S. R.
(8) Hospital Cleaners ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் — 400 S. R.
(9) Hospital Lady Cleaners ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் (பெண்கள்) வயது 30 - 42 — 456 S. R.
(10) Catering Lady Waiters விருந்துணவு பரிமாறும் பெண்கள் வயது 30 — 42 — 650 S. R.

**SAUDI OPERATION & MAINTENANCE CO. LTD.**

**T. V. TRAVELS & TOURIST**
(Railway Station front)
**Brown Road,**
**KOKUVIL.**
(C 611)


# நாடகக் குடும்பத்தின் தலைசிறந்த சகோதரன்
## நெறியாளர் குகராஜாவுக்கு அஞ்சலி

கொக்குவில் அக் 21 நாடகக் குடும்பம் என்பது ஒரு கூட்டுக் குடும்பம். அக் கூட்டுக் குடும்பத்தில் தலைசிறந்த சகோதரனாக இருந்த கலைஞர் குகராஜாவை இழந்துள்ளோம்.

நாடகக் கலைஞரும் நெறியாளருமான வீ. எம். குகராஜா அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலியில் உரை நிகழ்த்திய திருமதி குறமகள் இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

நடிகமணி வீ. வீ. வைரமுத்து தலைமையில யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரியில் வைபவம் நடைபெற்றது.

வசாவிளான அதிபர் திரு. எஸ். நடராஜா தமது அஞ்சலியுரையில் கூறியதாவது:

பின்தங்கிய சூழலில் பரம்பரைக் கலைக்குடும்பத்தில் தோன்றிய கலைஞர் குகராஜா சமுதாயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென பால்ய வயதிலேயே சேவை செய்யப் புறப்பட்ட இளைஞனாக அவரைச் சந்தித்தேன்.

இவரை நாடக கலைஞர் என்பதற்கு மேலாக ஒரு சமூக சேவையாளனாக கண்டேன்.

இவருடைய இழப்பினால் அவர் ஏற்படுத்திய சமூக எழுச்சி தடைப்பட்டுள்ளது.

இவருடைய இழப்பு வெற்றிடமாகவே உள்ளது. இதனால் இவர் சேவை செய்த சமூகத்தின் வளர்ச்சி ஐம்பது வருடங்கள் பின்தள்ளப்பட்ட விட்டது.

இப்படி அவர் கூறினார்.

மல்லிகை சஞ்சிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா தமதுரையில்;

பல கலைஞர்கள்பிறந்த மண்ணை விட்டு ஓடிய நிலையில் இந்த மண்ணிலிருந்து தன்னை அழித்துக் கொண்டவர் குகராஜா என்றார்.

யாழ், பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளரும் ஓய்வு பெற்ற ஆதிபரும் பிரபலநாடக ஆசிரியருமான திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் தமதுரையில்:

'திரு. குகராஜா வளர்த்தவர்களை மறக்காத பண்புடையவர். நாடக அனைத்துத் துறைகளிலும் அறிவுபெற்றவர். விருட்சமாக வளரவேண்டிய காலத்தில் தறிக்கப்பட்டவர். மனித நேயத்தோடு மக்களைப் பார்த்தவர்' என்றார்.

திருவாளர்கள் எஸ். ஜெயக்குமார், பிரான்ஸிஸ்ஜெனம் யோகலிங்கம் உட்பட இன்னும் பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

திருவாளர்கள் இ. முருகையன், ந. இரவீந்திரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

திரு. சோ. தேவராஜா நன்றியுரை நல்கினர்.

(இ- 69)

பொன்னலை - அருள்மிகு
## ஸ்ரீ வரதராஜப் பெருமாள்
### தேவஸ்தானம்

மேற்படி ஆலய மகா கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற ஸ்ரீமத் நாராயணன் திருவருளால் திருப்பணி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

பாலஸ்தாபனம் 23- 10- 88 ஞாயிறு காலை 7. 00மணிக்கு நடைபெற உள்ளது.

திருப்பணிகள் செவ்வனவே நிறைவுறவும், கும்பாபிஷேக விழா சிறக்கவும் பெருந்தொகைப் பணம் தேவைப்படுகிறது.

அடியார்கள் அனைவரும் இப்பணிக்கு அள்ளி வழங்கி ஸ்ரீமத் நாராயணனின் அருள் பெற்று உய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

கும்பாபிஷேக நிதிக்குப் பணம் செலுத்தும் அடியார்கள் அனைவரையும் உடனடியாகவே பரிபாலன சபையாரிடமிருந்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பரிபாலன சபையினர்

(7346)


## மீண்டும் சேவையில்
# கூட்டுறவு அச்சகம்!

வாடிக்கையாளர்களே!

கூட்டுறவு அச்சகம்
யாழ். ப. நோ. கூ. சங்க கிளை
57, பிரதான வீதி,
(மக்கள் வங்கிக் கிளைக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 22363

''குறைந்த செலவுடன்
நிறைந்த சேவை''
சகல விதமான அச்சக வேலைகளுக்கும்
யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்க
கூட்டுறவு அச்சகத்தை நாடுங்கள்

யாழ்நகரில் நீண்ட கால சேவையுடன் அனுபவமிக்க சிறந்த அச்சகப் பணியாளர் திறமையைப் பயன்படுத்தி தரமாக அச்சிட்டு விநியோகிக்க உத்தரவாதமளிக்கின்றோம்.

தயவு செய்து இன்றே உங்கள் தேவைக்கு எழுதி கூட்டுறவுச் சேவையின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவே நாட்டுயர்வு, வளர்க கூட்டுறவு.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
க. ம. இராஜேந்திரன்
தலைவர்.

யாழ். பல நோ. கூ. சங்கம்,
[illegible]
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அவசியம் என வலியுறுத்து

யாழ்ப்பாணம் அக் 21 ''எங்கள் பாடசாலை ஆரம்ப பிரிவு ஆசிரியர்களின் பற்றாக்குறையினால் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது. ஐந்து பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரே ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியருடன் வகுப்புக்களை நடத்துகிறோம். எதுவித பயிற்சியும் பெறாத வசதிக்கட்டண ஆசிரியர்களின் உதவியுடன் தான் எமது ஆரம்ப பிரிவு இயங்குகின்றது. இந் நிலைமையைச் சீர் செய்து தரும்படி கல்விப் பணிப்பாளரை வேண்டுகிறோம்.

நவாலி மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பொழுது வித்தியாலய அதிபர் திரு. கே. எம் மாணிக்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு மாணிக்கம் தனது உரையில் மேலும் கூறியதாவது: ''தற்போதைய கல்வித்திட்டத்தின் படி 7ஆம், 8ஆம் ஆண்டுகளில் வாழ்க்கைத் திறன் கல்வியை அறிமுகம் செய்யவிருக்கிறார்கள். எங்கள் பாடசாலையிலும் அடுத்த ஆண்டு அளவில் வாழ்க்கைத்திறன் பாடவிதானம் பின்பற்றப்படும்.

இது எமது சூழலுக்கு அமைவாகவும் எம்மாணவர்களுக்குப் பொருத்தமாகவும் அமைகிறது.

எட்டாம் ஆண்டில் கல்வி கற்றுப் பாடசாலையிலிருந்து விலகும் மாணவர்கள் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து கொண்டு கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்து கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இங்கு சித்தி பெறுபவர்கள் சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியிலும், பின்பு உயர் தொழில் நுட்பக் கல்லூரியிலும் கல்விகற்கலாம். உயர் தொழில் நுட்பக் கல்லூரி பல்கலைக்கழக அந்தஸ்தை உடையது.

11ஆம் ஆண்டுடன் பாடசாலையை விட்டு விலகும் மாணவர்கள் சிரேஷ்ட தொழில் நுட்ப கல்லூரியிலும் அதன் பின் உயர் தொழில் நுட்பக்கல்லூரியிலும் கலவி கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

ஆகவே உங்கள்பிள்ளைகளின் நலனை மனதிற்கொண்டு இந்த நீரோட்டத்தில் அவர்களையும் சேர்க்க முயற்சிக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

புதிய உத்தியோகத்தர் தெரிவின் போது; சென்ற ஆண்டு பணி ஆற்றிய நிர்வாக சபையினரையே தொடர்ந்தும் பணியாற்றும்படி சபை ஏகமனதாகத் தீர்மானித்தது (ச)

## வருடாந்த ஆதீனவிழா


யாழ்ப்பாணம், அக் 21 தென் இந்திய திருச்சபையின் யாழ். ஆதீன வருடாந்த விழா நாளை 22 ஆம் திகதி வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு நற்செய்தியுடன் ஆரம்பமாகும் விழாவில் பொதுக்கூட்டம் கலாசார நிகழ்ச்சி, மதிய போசனம் என்பனவும் இடம் பெறும்.

வண ஏ. ஜெயகுமாரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

(இ-5)


உஷா
பெருமிதமாக அறிமுகப செய்யும் பலவிதமான சீலிங் மின்விசிறிகள்



ஊஷா ஸ்டான்டர்ட்:
விலை : ரூபா 1500 முதல் 1575/–வரை

● 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
● ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர், புஷிங் 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது.
● மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள ஊஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள் !

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

ஊஷா அலங்கார விசிறிகள்
பொன் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1750/= முதல் 1975/= வரை

● தேவைக்கேற்ப கண்ணைக் கவரும் மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கோள்வடிவ மின்கமிழ்

தயாரித்து விநியோகிப்போர்:
ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிடெட
68. அத்திடிய ரோட் ரத்மலானை
தொலைபேசி: 71-6922, 71-7934 71-7[illegible]

[illegible]



# இதோ சிங்கர் வழங்கும் சீமா டயல் தராசு



● பொருளைப் போட்டதுமே எடையை அறியலாம்.
● இரு பக்கமும் தெரியும் எண் சுட்டுக் குறியீடுகள்
● சுழற்றக்கூடிய, துருப்பிடிக்காத பொருள் தட்டு.
● துருப்பிடிக்காத உருக்குத் தட்டுத் தாங்கியும் பலமான பிளாஸ்டிக் நிலைச்சட்டமும்.

சீமா பெடஸ்டல் தராசு (மேசையில் வைப்பது)
மொடல் C 6 TP
அளவுத் திறன்-6 கி.கி. X 20 கி. விலை: ரூ. 2,150/-



சீமா டயல் தராசு (தொங்கவிடுவது)
மொடல் C 6 H
அளவுத் திறன்-6 கி.கி. x 20 கி. விலை: ரூ.1,790/-
மொடல் C 15 H
அளவுத் திறன் – 15 கி. கி. X 50 கி. விலை: ரூ. 1,980/-

ஒரு வருடத்திற்குப் பூரண உத்தரவாதம். இலங்கை அளவை-நிறுவைப் பணியகத்தின் அனுமதி முத்திரை பெற்றவை. சிலோன் வேயிங் மெஷின்ஸ் லிமிட்டெட் உற்பத்தி.

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.

விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

Minds/SA/6



# முதலாம் ஆண்டு நி

## கடமை நேரத்தில் மரணித்த ஊழியர்



வைத்திய கலாநிதி ஏ. சிவபாதசுந்தரம்
(முந்தை வைத்திய நிபுணர்)
Dr. A. SIVAPATHASUNDARAM
(Paediatrician)
யாழ்ப்பாணம் பிறப்பு : 23-11-1939



டாக்டர் கே. பரிமேலழகர்
Dr. K. FARIMELALAGAR
பருத்தித்துறை பிறப்பு : 9-9-1947




டாக்டர் எம். கே. கணேசரட்ணம்
Dr. M. K. GANESHARATNAM
(Registrar / Surgery)
அண்டுக்குளி,
யாழ்ப்பாணம் பிறப்பு : 8-8-1959

FIRST ANN


**OUR TEARFUL HOMAGE TO**

We pray for the repose
the Jaffna Hospital on the 2
year and express our deep s


**Jaffna Tea**



எம். துரைராஜா
M. THURAIRAJAH
பருத்தித்துறை பிறப்பு : 23-11-1961




கே. மார்க்கண்டு
K. MARKKANDU
கைதடி பிறப்பு : 4-8-1948



எஸ். ஜெகநாதன்
S. JEGANATHAN
6 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு பிறப்பு : 1-11-1951



செல்வி ஆர். மங்கையர்க்கரசி
Miss. R. MANGAYATKARASI
நெடுந்தீவு பிறப்பு : 25-11-1956



ஆர். சுகுமார்
R. SUGUMAR
கைதடி பிறப்பு : 13-4-1943



M. ஜோன் பீட்டர்
M. JOHN PETER
ஆனைக்கோட்டை பிறப்பு : 15-3-1964



ஜி. உருத்திரன்
G. URUTHIRAN
தொண்டாவில் கிழக்கு பிறப்பு : 29-3-1963



ஆர். இரட்ணராஜா (பபி)
R. RATNARAJAH
வதிரி, கரவெட்டி பிறப்பு : 18-3-1959



1987 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யா
அகால மரணமடைந்த எமது ஊழியர்களி
அவர்களின் உறவினர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவு நினைவஞ்சலி

## ர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலி



## NIVERSARY

**O THOSE WHO DIED IN DUTY**

se of the souls who died at
21st and 22nd October last
sympathies to their families.

**eaching Hospital Staff.**



கே. கிருஷ்ணராஜா
K. KRISHNARAJAH
ண்டாவில் கிழக்கு பிறப்பு : 10-11-1937



சே. செல்வராஜா
K. S:.VARAJAH
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் பிறப்பு : 28-1-1933



திருமதி பி. வடிவேலு
Mrs. P VADIVELU
ருத்தித்துறை பிறப்பு : 1-10-1938




செல்வி எம். லீலாவதி
Miss M. LEELAWA'IHY
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம் பிறப்பு : 29-11-1958



கே. வேதாரணியம்
K. VETHARANIAM
கிளிநொச்சி பிறப்பு : 28-1 1960



கே. சிவலோகநாதன்
K. SIVALOGANATHAN
பருத்தித்துறை பிறப்பு : 12-5-1963



வி. சிவராஜா
V. SIVARAJA I
சாவகச்சேரி பிறப்பு : 9 4-1962



பி. வரதராஜன்
P. VARATHARAJAN
புத்தூர் பிறப்பு : 17-11-1959



வி. சண்முகலிங்கம்
V. SHANMUGALINGAM
உரும்பராய் பிறப்பு : 3?-12-1938

கந்தையா நவரட்ணம்
K. NAVARATNAM
வேலணை-3 பிறப்பு : 3-4-1937




ஆர். சுப்பிரமணியம்
R. SUBRAMANIAM
மல்லாகம் பிறப்பு : 20.08 1942

ாழ். போதனு வைத்தியசாலையில்
ின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு
 எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

—யாழ். வைத்தியசாலை ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**தபிப்பிள்ளை செல்வரட்டினம்**

ஆண்டவன் படைப்பு: 20- 12- 1924
அநியாய அழிப்பு: 21- 10- 1987


மின்னுமைல் முழங்காமல் எங்களை ஏங்க வைத்த பொல்லாத காலன் இரக்கமின்றி உம்மை எம்மிடமிருந்து பிரித்து ஆண்டு ஒன்று ஓடினாலும் எங்கள் உள்ளத்தில் அழியாது இருக்கும் உமது ஒளி தரும் நினைவால் கலங்கியே நிற்கின்றோம்.

– மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.

விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(7349)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**ஜெயராமன் நடனராசா (நடேஸ்)**
(நீர்ப்பாசனத் திணைக்களம்-யாழ்ப்பாணம்

ஆண்டவன் படைப்பு: 20 - 05 - 1961
அநியாய அழிப்பு: 21 - 10 - 1987

**திதி: 08. 11. 1988**

ஆண்டுதான் ஒன்று கழிந்திடினும்
அகிலமேதான் அழிந்திடினும்
மாறுது உன் நினைவு
என்றும் எம் மனதை விட்டு

" தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலில் தோன்றாமை
நன்று " எனும் வள்ளுவர் சொற்படி

எத்தனை இடர்கள் மத்தியிலும்
யார் எது சொன்னாலும் மறுத்திடாமல்
செய்யும் தொழிலே தெய்வம்
கடமையே கண் என
அல்லும் பகலும் ஓடி ஓடி உழைத்து
ஊருக்கெல்லாம் உபதேசம் செய்து
ஊரார்புகழை அன்றும் இன்றும் பெறும் நீ
உனக்கென்று என்ன செய்தாய்?

உன்னால் வாழ்ந்தோர் பலர்
கண்ணீர் விட்டோர் சிலர்

எமக்கெல்லாம் ஒளி விளக்காய்த் திகழ்ந்த நீ திருமண வாழ்க்கை தேடிவர தீபத் திருநாளிலே எமையெல்லாம் மாறுத்துயரில் ஆழ்த்தி விட்டு தமிழ் மண்ணுலகிலிருந்து இறை விண்ணுலகம் சென்றாயோ!

நாளுக்கு நாள் உங்கள் பிரிவையிட்டு
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அத்தான், தம்பிகள்,
பெரியப்பா, பெரியம்மா, மாமா,
மாமிமார், மைத்துனர்கள்,
தங்கைகள், மச்சாள்மார்கள்,
சித்தப்பா, சின்னம்மாமார்கள்,
மருமக்கள், பெருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்களும்
நீர்ப்பாசனத்திணைக்கள-
உத்தியோகத்தர்களும்.

நாவற்குழிச் சந்தி,
கைதடி.

(7339)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:
9 11-1896

மறைவு:
1 11-1987



**ஆறுமுகம் ஏகாம்பரம் (தலையாளி)**

தனக்கென்று வாழாது உற்றார், உறவினர், குடும்பத்தவர்கள் நலனுககாக அயராது உழைத்து, பாசத்துடன் எம்மை வளர்த்த உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

22-10-88இல் எமது தலையாளி இல்லத்தில் நடைபெறும் மதிய போசனம் மற்றும் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார் உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

E. விவேகானந்தன், (மகன்),
மற்றும் குடும்பத்தினர்.

15/12 தலையாளி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(7503)

## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் ஜெயசீலன் ஞான ஈஸ்வரன்**
(1 ஆம் வருட பொறியியல் மாணவன் யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்)

மலர்வு: 26 09-1964
உதிர்வு: 21-10-1987


நண்பா!
நீ பாடித்திரிந்த
பாதைகள் எல்லாம்
மௌனமாக
அழுது வடிந்து
கொண்டிருக்கின்றன

கண்ணீரின்
கதையை—எம்
கரங்கள்
மௌனத்தில்
எழுதிக்
கொண்டிருக்கின்றன

சக பொறியியல் மாணவர்கள்
(யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்)

(C/109)

## முதலாம ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் சண்முகநாதன்**
(நிர்வாக உத்தியோகத்தர்
நெற்சந்தைப்படுத்தும் சபை, கிளிநொச்சி)

ஆண்டவன்படைப்பு:- 11- 12- 1945
அநியாய அழிப்பு:- 21- 10- 1987

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்த உங்களை எங்கள் கண் முன்னாலேயே தீபாவளி தினத்தன்று காலன் வந்து பறித்தானோ? எங்களைத் தவிக்க விட்டு எங்குதான் சென்றீரோ? உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள மனைவி, அப்பா,
சகோதரர்கள், சகோதரி,
மாமா, மாமி, மைத்துனர்கள்,
மைத்துனிகள், உறவினர்கள்.

கட்டப்பிராய்,
கோப்பாய்.

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**சுகாதாரத் திணைக்களம்**
**யாழ்ப்பாணம் பெரும்பாகம்**

அரசினர் வைத்தியசாலைகளுக்கு 1989ஆம் ஆண்டில் பால் தவிர்ந்த உணவு வழங்குவதற்கும் அழுக்குத்துணி சலவை செய்வதற்கும், கேள்வி முறையே 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம், 11ஆம் திகதிகளில் முற்பகல் 10மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். முழு விபரங்களுக்கும் 1988-09-16ஆம் திகதி இடப்பட்ட அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

– ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

விக்ரோறியா றோட்,
யாழ்ப்பாணம்.
17- 10- 1988

(C/636)

## ஓராண்டு நினைவஞ்சலி



வைத்திய கலாநிதி
**கதிர்காமு பரிமேலழகன்**
(யாழ்.போதனா வைத்தியசாலை)

அன்னையின் மடியில்: 09- 09- 1947
ஆண்டவன் அடியில்: 21- 10- 1987

அன்பின் ஒளிவிளக்காய், அறிவின்சுடர் ஒளியாய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எங்கள் குடும்பம் வாழவைத்த தெய்வமே உங்கள் அறிவின் திறமையால் மாறாத நோய் என்று மனம் வருந்திவரும் நோயாளிகளை இன்முகத்துடன் வரவேற்று பல உயிர் காத்த தெய்வமே! கடமையே கண் என்று இருந்த நேரத்தில் குண்டு துளைத்து அநியாய அழிவிற்கு ஆளான தெய்வமே! உங்கள் உடலையேனும் காணாத பாவி எங்களுக்கு எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவாக நெக்கு நெக்கு உருகுவோம்.


உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பின் மனைவி நிர்மலா
மாமாமார், மாமிமார்,
அன்புமைத்துனி- பேபி,
விசயன்.

அழகாபுரி,
உடுப்பிட்டி

(7256

## ஓராண்டு நினைவஞ்சலி



**பொன்னம்பலம் வரதராஜன்**

மலர்வு: 11-11-1959
உதிர்வு: 21-10-1987


பாசத்தின் திருவிளக்கே
பண்புள்ள திருமகனே
ஆருயிர்த் துணைவரே
அன்பிற்கோர் சோதரனே!
கடமைக்குச் சென்ற உம்வரவை
களிப்புடன் நாம் பார்த்திருக்க
திடுக்கிட வைத்து தீபத் திரு
நாளாம் அன்றே உன்னை
காலன் அழைத்தானோ
ஆறுதலுக்கோர் பிள்ளை
இருக்கிறாய் என நினைந்தோம்
ஆறாத்துயரத்தில் எமையெல்லாம்
ஆழ்த்திவிட்டுச் சென்றனையோ
அன்பின் திரு உருவே உன்
ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனிடம்
எம் பிரார்த்தனையைச்
சேர்க்கின்றோம்.

அன்பு மனைவி, மகன்,
பெற்றோர் சகோதரிகள்
உற்றார், உறவினர்கள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(7502)

## ஓராண்டு நினைவாக



**திரு. இரட்ணம் குணநாயகம்**
(உரிமையாளர்:
(R. G. ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

தோற்றம்: 26-02-42
மறைவு: 21-10-87

குணத்தின் நாயகனாய் திகழ்ந்தீரேஐயா – எம் நெஞ்சங்களை ரணமாக்கி எங்கே போய்மறைந்தீர்?
உழைப்பால் உயர்ந்த உத்தமரே – உங்கள் உடல் ஒய்ந்து ஓராண்டு போனாலும் – எங்கள் உள்ளத்தின் ஒவ்வோர் அணுவிலும் நீர் வாழ்கின்றீர்.

உம்மோடு வாழ்ந்த நாட்களின்
நினைவோடு வாழும்
மனைவி விஜயா குணநாயகம்
பிள்ளைகள் தர்ஷினி, சுபோதினி.
சஜனி, தாரணி
தாய், சகோதர சகோதரிகள் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

54, றக்காவீதி,
யாழ்ப்பாணம்.

(7267)

## ஓராண்டு நிறைவு நாள்



**அமரர் வ. தம்பிராசா**

மண்ணில்: 12-10-1931
விண்ணில்: 01 11-1987

**திதி: 21. 10. 1988**

வான் உறையும் வேல் முருகா
தேன் வடியும் சொல்லழகா
குறையனைத்தும் தீர்ப்பவனே
மனையனைத்தும் வாழ்பவனே
வேண்டுகிறோம் வந்திடுவாய்
வாழ்த்துகிறோம் அருள் தருவாய்

இறைவனின் திருவருளை முன்னிட்டு 21-10-1988 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு எனது அன்புத் தந்தை அமரர் வ. தம்பிராசா அவர்களின் ஓராண்டுத் திதி எனது இல்லமான 144, சேர். பொன். இராமநாதன் வீதியில் நடைபெறும்.

இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்-
த. சுந்தரலிங்கம்,
மருமகன்- (Tower CoolBar)
சன்மார்க் கொன்ராக்ரர்ஸ்,
பிராங்போட் எலற்றிக்கல்
உரிமையாளரும்.

(C/629)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் அழைப்பு

ஆனைக்கோட்டை நிறைவான புதுவாழ்வு நிலையத்தின் 12ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 21, 22, 23-10-88 வரை உயிர் மீட்சிக் கூட்டங்கள் நடைபெறும். விசுவாசிகள் யாவரையும் அன்புடன் பங்குபற்றி இறையாசீர் பெற்றிட அழைக்கின்றோம்,

புதுவாழ்வு விசுவாசிகள்

(7375)

---

வடபிராந்திய மினிபஸ் சேவை சங்கங்களின் சமாஜம்

## 787 மாதகல் தனியார் மினிபஸ் சேவைச் சங்கத்தின்

(மாதகல் பஞ்சாயத்துச் சபை)

## காரியாலயம் திறப்புவிழா

இடம்: மாதகல் சந்தி
காலம்: 23- 10- 88 ஞாயிற்றுக்கிழமை

காலை 10 00 மணிமுதல் 11.50 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

வடபிராந்திய மினிபஸ் சேவை சங்கங்களின் சமாஜத் தலைவர்
திரு. பொன். மதிமுகராசா
அவர்களால் திறந்துவைக்கப்படும்

வ. பி. மி. சே. சங்க சமாஜ பொதுச் செயலாளர்
திரு. இ. செல்வராசா உட்பட
பலர் இவ் விழாவில் கலந்துகொள்வார்கள்.
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

787, மாதகல் தனியார் மினிபஸ் சேவைச் சங்கம்

செ. நவரத்தினராசா,
தலைவர்.

கே. சுப்பிரமணியம்,
பொதுச் செயலாளர்.

(C.410)

---

காரைநகரில்

## அகண்ட நாம பஜனை ஓராண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், அக். 21

காரைநகர் மணற்காடு அருள்மிகு கும்ப நாயகி ஸ்ரீ முத்துமாரி அன்னையின் தேவஸ்தானத்தில் காரைநகர் மணற்காடு அன்னை அகண்ட நாம பஜனைக் குழுவினரால் பூரணை விழாக்கள் தோறும் நடத்தப்பட்டு வரும் அகண்ட நாம பஜனை ஓராண்டு நிறைவுவிழா 25-10-88 செவ்வாய்க்கிழமை காலை 5மணிப் பூசையுடன் நிறைவு பெறவுள்ளது.

நாடு நலம் குன்றிப் போவதுகண்டு மணற்காட்டு நாயகியிடம் மனதை ஒப்படைத்து நாடு நலம்பெற வேண்டி அகண்ட பஜனை மூலமாக கடந்த ஆண்டு ஆரம்பமாகிய பஜனையின் ஓராண்டு பூர்த்தியினையொட்டி 22-10-88 திங்கட்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் பஜனை ஆரம்பித்து தொடர்ந்து 24மணி நேரம் நடைபெறவுள்ளது.

(இ-119)

---

## நன்றி நவிலல்

### ஆறுமுகம்பிள்ளை கனகசபை

பன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகம்பிள்ளை கனகசபை (ஓய்வு பெற்ற சுங்க இலாகா உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்-கொழும்பு) அவர்கள் 1988 10-15 ஆம் திகதி காலமானார். அன்னார் காலம்சென்ற காமாட்சி அம்மாளின் அன்புக் கணவரும், நடராஜா, (யாழ். செயலகம்) சிவகாமசுந்தரேஸ்வரி, பாக்கிய இலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜினிதேவி, ஏழூர்நாயகம் (மாவட்ட வைத்தியசாலை,தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன், சடகோபன், காண்டீபன், தமயந்தி, வானதி, நிரந்தரி (மகாஜனக் கல்லூரி மாணவர்), புராதனி ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 1988-10-15 ஆம் திகதி நடைபெற்று பூதவுடல் கீரிமலை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அன்னார் காலமான செய்தி கேள்வியுற்று அன்னாரின் ஈமக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பன்னாலை,
தெல்லிப்பழை.

(7373)

---

## அக்டோபர் நினைவில்...!

1987 அக்டோபர் அனர்த்தங்களின் போது இன்னுயிரை இம்மண்ணுக்கு ஈந்த வேங்கைகளுக்கு கைகூப்பி, சிரம்தாழ்த்தி எமது வீர வணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றோம்!

அதே நாட்களில் யாழ் வைத்தியசாலையில் உயிரிழந்த மக்களுக்கும் ஆங்காங்கே தெரிந்தும், தெரியாமலும் கொல்லப்பட்ட எமது மக்களுக்கும் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

எமது வேங்கைகளினதும் மக்களினதும் சாம்பல் பூத்த மேட்டில் இருந்து ஒரு புதிய அத்தியாயம் எழுதப்படட்டும்

குருநகர் மக்கள்.

(C/647)

---

## கொழும்பு மூவிலண்ட் ஸ்தாபனத்தாரின் ஆதரவுடன்

குணம் வீடியோ சென்ரரின்

## நேற்றைய புதிய வெளியீடு

மிக நீண்ட நாட்களாக ரஜனிகாந்தின் ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
" ரஜனியின் "

## "BLOOD STONE"

(மினி சினிமா உரிமையாளர்கள் மட்டும் முதலில் தொடர்பு கொள்ளவும்)

ஏனைய வெளியீடு:
(1) WORLD GONE WILD
(WAR FILM)

அடுத்த வெளியீடு

## "மனைவி ஒரு மந்திரி"

---

## ஓராண்டு நினைவஞ்சலி



## லெப்ரினன்ற் கேர்ணல்

சந்தோசம் (க. உமைநேசன்)

'திருமலையின் ஆரம்ப காலத் தளபதி'

(ஓய்வுபெற்ற அதிபர் ப. கணபதிப்பிள்ளை அவர்களின் இரண்டாவது புத்திரன்)

தோற்றம்: 4- 1- 1959
மறைவு: 21- 10- 1987

திதி: 8- 11- 1988
[தீபாவளிதினம் சதுர்த்தசி]

எங்கள் இதய விளக்கே உமைநேசா! எங்களை விட்டுப்பிரிய நீ எங்ஙனம் துணிந்தாய்? நீ பிரிந்து ஒருவருடம் ஆகிவிட்டது. ஆனால் என்றும் எம் உள்ளத்தில் நீ உறைவாயா? உன் எடுப்பான தோற்றம், வசீகரமான முகம், புன்முறுவல் பூத்த வண்ணம் இருக்கும் உன் அதரம்! என்றுமே எம்முடன் இணைந்தே இருக்கும்.

வீரவேங்கையே உனக்கு எமது கண்ணீர் அஞ்சலி!

இங்ஙனம்
பெற்றோர், அக்கா, அண்ணா, தம்பி, மைத்துனர், மருமக்கள்.

(7378)

---

## அக்டோபரில் மறைந்த அந்த ஒளியைத் தேடுகின்றோம்!



**அந்தோனிமுத்து விக்டர்**

1987 தீபாவளித் திருநாளன்று! பத்திரிசியார் கல்லூரியிலும், பேராலயத்திலும் மக்கள் பயத்தால் பாதுகாப்புத் தேடி போயிருந்த முதல் நாள்... . காயமடைந்த அப்பாவி மக்களையும் அவர்களது உடல்களையும் விக்டர்... நீ எந்த நிலையிலும் துணிந்து செயல் படுவாய்... உனது சொந்த வாகனத்தில் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றாய்...... விக்டர்! திரும்பி இன்னும் நீர் வரவில்லை!

'நீரின்னும் உயிருடன் இருக்கிறீர்' என்ற நம்பிக்கையை இன்னும் உமது குடும்பத்தார் இழக்கவில்லை! அனர்த்தங்கள் ஓரளவு தணிந்தபின் ஆஸ்பத்திரி வீதியில் உமது தீயில் வெந்த வாகனத்தை பார்த்தோம்!

உள்ளும்,புறமும் மண்டை ஓடுகளும் எலும்புத் துண்டங்களும்... விக்டர்... அவற்றில் நீ எந்தப் பாகம்?

நண்பர்கள்

C/648.

---

## "நீ மறைந்து ஓராண்டு! நினைக்கையிலே நெஞ்சமெலாம் தீ நிறைந்து போகிறதே! ..."



அமரர்

## திரு. மு. அரியரத்தினம்

Staff Technician Department of chemistry, university of Jaffna

மண்ணில் பிறப்பு: 08- 12- 1941
அநியாய அழிப்பு: 22- 10- 1987

நீ மறைந்து ஓராண்டு! நினைக்கையிலே நெஞ்சமெலாம்
தீ நிறைந்து போகிறதே! திரு இழந்து போனாற்போல்
மா பெரிய இழப்பொன்றை மற்றவர்கள் மேற்சுமத்தி
நா வரண்டு நாம் கதற நல்லவனே போனாயோ!
அதிராத வார்த்தைகளும், அன்பான நடைமுறையும்
சிதறாத எண்ணத்தால் சினக்காத உன்குணமும்
உதிராத பூப்போல உயர்வுதரும் உன்முகமும்
புதிராகப் போனதுவோ? பொன்மகனே போனாயோ!
காலங் கடந்திடினும் சுற்றிடவே பலர்வரினும்
ஓலங்கள் எல்லாமே ஓய்ந்திடினும் - ஞாலமதில்
என்னாளும் உந்தன் இனிய நினைவுகளைப்
பொன்னாகப் போற்றுவோம் புகழ்ந்து.

சக ஊழியர்கள்.
இரசாயனத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

(7510)

---

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 1989

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்காணும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் 1989ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 1989ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரசு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 09 11-1988ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேச சபை செயலாளரால், கேள்வி வைப்பு-கேள்விப் பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 07-11-88 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 09-11-88 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக, மூலப் பிரதியை விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனவும். இணைப்பிரதியை பிராந்திய உ. ஆ. உ. ஆணையாளர், கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனவும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கந்தோர் கேள்விப் பெட்டியில் போடலாம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இன்ன குத்தகைக்கான கேள்வி 1989" என குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர், கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைய குத்தகையை நடாத்துதல் வேண்டும் நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறுமிடத்து எதுவித நஷ்டஈடுமின்றி குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும் எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு வேறு விபரங்கள் தேவைப்படின் நல்லூர் பிரதேச சபை பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை பணிமனை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
19-10-1988

க. சண்முகநாதன்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேச சபை.

| இல. | குத்தகையின் தன்மை | கே. ப. பணம் | கே. வை. பணம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மத்திய சந்தை (பழைய மீன்சந்தை பகுதி தவிர்ந்த) | 100 - 00 | 1000 - 00 | 5,10, 000- 00 |
| 2. | திருநெல்வேலி சந்தை துவிச்சக்கர வண்டி-பாதுகாப்பு நிலையம் | 25 - 00 | 100 - 00 | 7, 500 - 00 |
| 3. | திருநெல்வேலி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 25 - 00 | 500 - 00 | 30, 000 - 00 |
| 4. | திருநெல்வேலி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 25 - 00 | 1000 - 00 | 65, 000 - 00 |
| 5. | தாளையடிலேன் ஆட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 6. | மணியம்தோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 100 - 00 | 6, 000 - 00 |
| | **நல்லூர் பிரதேச சபை - கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 7. | ஆடியபாதம் சந்தை | 25 - 00 | 500 - 00 | 25, 000 - 00 |
| 8. | கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை | 25 - 00 | 100 - 00 | 600 - 00 |
| 9. | கோண்டாவில் கிழக்கு மீன் சந்தை | 25 - 00 | 100 - 00 | 1, 000 - 00 |
| 10. | கோண்டாவில் ஸ்ரேசனடிச் சந்தை ஆட். கடை (புதிதாக அமைக்கப்படவிருப்பது) | 25 - 00 | 100 - 00 | 6, 000 - 00 |
| 11. | ஆடிய. சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 12. | ஆடிய. சந்தை மாட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 13. | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை (புதிதாக அமைக்கப்படவிருப்பது) | 25 - 00 | 250 - 00 | 8, 000 - 00 |
| 14. | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை (புதிதாக அமைக்கப்படவிருப்பது.) | 25 - 00 | 250 - 00 | 8, 000 - 00 |
| 15. | 327, பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 16. | கோவில் தோட்டம் ஆட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 17. | பொற்பதி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 18. | 19, இராமநாதன் வீதி மாட்டிறைச்சிக் கடை | 15 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |
| 19. | இணுவில் மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 25 - 00 | 250 - 00 | 10, 000 - 00 |

(C-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALCOHOLICS ANONYMOUS-JAFFNA GROUP

குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு விரும்புகிறீர்களா? இது சம்பந்தமாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

சந்திக்கும் நேரங்கள்:
22-10-88 பி.ப. 3.00-பி.ப. 5.00
26-10-88 பி.ப. 3.00 பி.ப. 5,00

"சாந்திகம"
21, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (7280)

## முதலாம் வருட நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு 15-03-1964 அநியாய அழிப்பு 21-10 1987

### கு. ஜோண்பீற்றர் (சில்றன்)

(யாழ். வைத்தியசாலை ஊழியர்)

எங்கள் அன்பு மகனே! அருமைச் சகோதரனே! கடமையே கண்ணெனக் கருதும் மக்கள் சேவையை இறைவன் சேவையென யாழ். வைத்தியசாலைக்குச் சேவை செய்ய விரைந்தீர். நாம் உம்மை இன்று வருவீர்; நாளை வருவீர் என வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அமைதி எங்கோபோயிற்று. அநியாயமாக உமது உயிரைப் பறிப்பார்கள் என்று நாம் கனவிலும் நினைத்ததில்லை. காலம் கடந்து தான் உம் அவலமரணச் செய்தியைக் கேட்டோமே யொழிய உமது உடலைத்தானும் பார்க்க முடியாதபெரும்ப விகளாய்ப்போனோம்ஐயா!

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி ஆலயத்தில் 21 10. 1988 இல் காலை 6 30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இங்ஙனம் பிரிவால் துயருறும்
தாய். தந்தை, சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பெருமக்கள்,
மருமக்கள்,

உயரப்புலம்
ஆனைக்கோட்டை
(7501)

## ஓராண்டு நினைவஞ்சலி



டாக்டர் க. பரிமேலழகன்
[யாழ். போதனா வைத்தியசாலை]

மலர்வு: 09-09-1947 உதிர்வு: 21-10-1987

சட்ட வைத்திய நிபுணரும் பேராசானுமாகிய, கடமையே தெய்வமென்றும், ஆஸ்பத்திரியே கோவிலென்றும் சேவையாற்றிய எமது அன்புத் தெய்வம்.

அக் கோவிலுக்குள்ளேயே காலனின் பிடியிற் சிக்கி இன்னும் அவன் பிடிக்குட்பட்ட நூற்றுக்கணக்கானோருடன் நூற்றுக் கணக்கான பிடி சாம்பருக்குள் ஒரு பிடி சாம்பலாகி அதில் ஒரு துகளேனும் எமக்கு கிடைக்காத நிலையில் இன்றும் மனம் வெதும்புகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்:

மனைவி, மகள், அக்கா, தங்கை,
மாமா, மாமி, மச்சாள், மச்சான்,
மருமக்கள்.

(7348)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### 1988-ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்குப் புகைப்படம் எடுத்தல்

26—11—1988இல் நடைபெறவுள்ள பொதுப் பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் (கலர்) எடுப்பதற்குப் படப்பிடிப்பாளர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. படம் எடுப்பதற்கு விண்ணப்பிக்க விருப்பம்உடையவர்கள் தாங்கள் எடுத்துள்ள படங்களின் மாதிரிப் பிரதிகளுடனும் தமது தகுதியைக் காட்டும் பிற சான்றுகளுடனும் 27-10-1988ஆம் திகதி மு ப. 9-30 மணிக்கு பல்கலைக்கழக சபை அறையில் சந்திக்கவும்.

போஸ்ற்காட் பருமனுள்ள படப்பிரதி ஒன்றிற்கு உரிய விலைக்கூற்றை பொறிவிடப் பட்ட கடித உறையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
18—10—88 (C-64)

## 1st ANNIVERSARY REMEMBRANCE
IN FOND MEMORY
OF
OUR BELOVED



**PATRICK SAVERIMUTTU**

Born; 17-03-1969
Called Home: 21-10-1987

"Too Young To Die
Too Precious To Lose
You'D Gone Away
Without E'En A Good-Bye"

A memorial mass will be offered on 21-10-1988 at the Rosartan Ashrame at 5-30 p.m.

Your kind presence and prayers will be deeply appreciated.

**Mr. & Mrs. L. Saverimuttu**
172, Main Street,
Jaffna. (7345)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம் சண்முகநாதன்
(நெற்சந்தைப்படுத்தும் சபை கிளிநொச்சி)
அவனியில் பிறப்பு: 11-12-1945
அநியாய அழிப்பு: 21-10-1987
திதி:- 8-11-1988

தந்தை தாய்க்கு, அருமைமைந்தனாய்
பாரினில் அவதரித்து
சிந்தை பெருக்கிட
பல்கலைக்கழகம் புகுந்து
பண்டிதனாய் பாரினில் போற்றிட
நெல் சந்தைப்படுத்தும்
சபையில் கடமையாற்றி
பண்பைவளர்த்து எல்லோர்
மனம் கவர்ந்த நண்பனாகி
கதிரவனாய், எம் வாழ்வில்
ஒளியினை ஏற்றிட்ட உன் வாழ்வு
காரிருளில் மறைந்ததோர்
அவர்களின் வஞ்சகத்தால்!
சடுதியில் மறைந்த உன் உருவம்
மனதினில் மறையுமோ!
உவ்விடம் நாம் வருமளவும்
நின் ஆன்மா சாந்தியடைய எம்நெஞ்சில்
நித்தமும் உம்மை நாம் அஞ்சலிப்போம்

தந்தை, சகோதரர்கள், மனைவி.
(7340) கோப்பாய் [illegible]

# ஒஸ்மானியாக் கல்லூரியின் வெள்ளிவிழா இன்று ஆரம்பம்

### திங்கள் வரை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், அக் 21

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் 25 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 21 ஆம் திகதி காலை 600 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டியுடன் ஆரம்பமாகிறது.

22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிவரை வெள்ளி விழா தொடர்பான நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன.

பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ள இன்றைய மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்களும் ஓட்டத்தைப் பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-45 மணிக்கு கல்லூரியின் பரிசளிப்பு விழா நடைபெறுகிறது

23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பழைய மாணவர் சங்க ஒன்றுகூடலும் அங்கத்தவர்களுக்கான மதிய போசனமும் இடம் பெறும் வெள்ளிவிழா ஞாபகார்த்தக் கட்டடத்திற்கான அத்திவாரக்கல் நடும் விழா பிற்பகல் 4.00 மணிக்கு இடம் பெறும்.

பிற்பகல் 4-45 மணிக்கு உதைப்பந்தாட்ட போட்டி நடைபெறும். இப்போட்டியில் வவுனியா மாவட்ட தெரிவுக் கோஷ்டியுடன் யாழ் முஸ்லீம் விளையாட்டுக் கழகம் மோதுகிறது.

24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு வளர்மதி விளையாட்டுக்கழகத்துக்கும் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் நடைபெறும்.

பிற்பகல் 4.00மணிக்கு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்குக்கும் பொற்பதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி நடைபெறும்.

பிற்பகல் 5.00 மணிக்கு கல்லூரி கோஷ்டிக்கும் பழைய மாணவர் கோஷ்டிக்கும் இடையில் உதைப்பந்தாட்டம் நடைபெறும். (இ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், அக் 21

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் 1986, 87 ஆம் ஆண்டுகளில் நடத்தப் பட்ட சைவ சமயப் பரீட்சையில் அகில இலங்கைப் பரிசில் பெறுபவர்களுக்கான பரிசளிப்பு விழா 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்,

பரிசளிப்பு விழாவுக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. இராசந்திரன் தலைமை வகிப்பார்.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் சைவ சமயப் பரீட்சையில் அகில இலங்கைப் பரிசில் பெறுபவர்களுக்குப் பரிசில்களை வழங்குவார். (ச)

## வீடமைப்புப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

மாங்குளம், அக் 21

குறைந்த செலவுக்கான வீடமைப்புப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் யோகபுரம் ரயணன் குளத்தைச் சேர்ந்த திரு எஸ்- யோகநாதன் முதலாவது இடத்தையும், நட்டாங்கண்டல் மூன்று முறிப்பைச் சேர்ந்த திரு. இ. அமிர்தலிங்கம் இரண்டாம் இடத்தையும் மாங்குளம் பனிக்கன்குளத்தைச் சேர்ந்த திரு. கே- செல்வராசா மூன்றுவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

1988/1989 ஆண்டு போட்டிக்கான விண்ணப்பங்கள் தற்போது வரவேற்கப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பத்தை கிராம சேவை அலுவலர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்போட்டிக்கான கடைசிததிகதி 31-12-88 ஆகும் (இ-16)

## மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம், அக் 21

1862 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திருக்குடும்பச் சபையின் 125 ஆவது வருட பூர்த்தியை நினைவு கூரும் முகமாக நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

யாழ் மரியாள் பேராலயத்தில் 24 ஆம் திகதி காலை 11 மணி அளவில் இந்தத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் (இ-5)

## கலை இலக்கியக்களம் சிந்தனை மேடை

யாழ்ப்பாணம், அக் 21

கலை இலக்கியக் களத்தின் பதினேழாவது ஒன்று கூடல் சிந்தனை மேடை 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.15 மணிக்கு நடைபெறும்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு கலாநிதி நா. சுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

சிந்தனைப் பொருளாக 'வேதாந்த சைவ சித்தாந்த மரபுகளில் முத்தி நிலை" என்பது பற்றி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருமதி. கலாதேவி பொன்னம்பலம் உரையாற்றுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை தலைவர் கலாநிதி. ப. [illegible] கலந்து கொள்ளுவார். (இ-சி)

## தெற்கில் சுவீப் டிக்கட் விற்கத்தடை


கொழும்பு, அக். 21

தென் மாகாணத்தில் சுவீப் டிக்கட்டுக்களை விற்பனை செய்யக்கூடாது என விற்பனை முகவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதேயக் கடிதங்கள் மூலம் இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாம்.

இதனால் தென் இலங்கையில் சுவீப் டிக்கட் விற்பனை ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. (ஒ-எ)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லையா கந்தசுவாமி
(சுகாதார மேற்பார்வையாளர்
யாழ்.மாநகரசபை)

அவனியில் தோற்றம்: 05-10-1936 அநியாய மறைவு: 21-10-1987

திதி நாள்: 08-11-1988

அவர்களின் அநியாய அழிப்பினுக்கு
ஐயா நீர் ஆளானீர்!
ஆண்டொன்று ஆனாலும் அத்துயர் ஆறுது!
அமரா நின் அன்புமுகம்- அன்புடையோர்
நெஞ்சமதில் அனுதினமும் ஆடுதையா!
வேலவரின் திருநாமம் விருப்புடனே
பூண்டவரே
வேலவரை வேண்டுகின்றோம்
விரைந்து நீர் சாந்திபெற!

இவ்வண்ணம்
மனைவி மகேஸ்வரி
மகன் சிவரூபன்
மற்றும் உறவினர்கள்

இலந்தைக்குளம் வீதி
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம். (7321)

உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

**கம்பியூட்டர் கல்வி**

● COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம்: 40 நாட்கள் கட்டணம்: 950/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 28-10-88
[திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்

BASIC LANGUAGE கற்றவர்களுக்கான

● COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE

பயிற்சிக் காலம்: 3 மாதம் கட்டணம்: 1,500/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 29-10-88
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

● குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

UNIKCO COMPUTER CENTRE
No 5, மின்சார நிலைய வீதி,
2ஆம், ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C-633)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

**பொருள்:**
அழிவைத் தரும் தீமைகளில் இருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவு வந்தகாலத்தில் உடனிருந்துதுன்பப்படுவதே நட்பாகும்,

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல- 892/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 28073
21-10-1988 உ. செ. இல. 88

# மனித நேய ஆதரவு தேவை

**பூஸா** தற்காலிக சிறையில் கடந்த இருபத்தொரு நாட்களாக உண்ணுவிரதம் இருந்து வரும் தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசாங்கம் இன்னும் சிறிதேனும் அக்கறை காட்டவில்லை. உண்ணுவிரதம் இருக்கும் கைதிகள் பொது ஸ்தாபனங்களுக்கு எழுதிய கடிதத்தில் இதனைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கமும், அதன் கூட்டாளியான இந்தியாவும் தமது மன உணர்வுகளை மதிக்கத் தவறி விட்டன.

கைதிகளை விடுதலை செய்வது என்பது, மனிதாபிமான நீதியுடன் செய்யக்கூடிய இலகுவான சிறுவிடயம்.

காந்தீயக் கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் இலங்கை, இந்திய அரசுகள் எமது காந்திய வழிப் போராட்டத்தை மதிக்குமா?

இலங்கை - இந்திய ஒப்பந்தம் எமக்கு விடுதலையைப் பெற்றுத்தராவிடில். மரணமாவது நிரந்தர விடுதலையைப் பெற்றுத் தரட்டும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உண்ணுவிரதம் இருக்கும் கைதிகளின் மனநோவையும், நெஞ்சுறுதியையும் அரசாங்கத்தின் சிறிகளவேனும் மனிதநேயமற்ற போக்கையும் இந்தக் கடிதம் மிகத் தெளிவாக எடுத்து உரைக்கிறது.

தண்டிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் உண்ணுவிரதம் குறித்து இப்பத்தியில் ஏற்கனவே எழுதியிருந்தோம். அவர்களின் உண்ணுவிரதத்துக்கு பொதுமக்கள் ஆதரவு தேவை; சிறைச்சாலையில் மட்டுமன்றி வெளியிலும் எழுச்சிப் போராட்டங்கள் தேவை என்று அப்போது வலியுறுத்தி இருந்தோம்.

இலங்கை அரசாங்கம் சாத்வீகப் போராட்டங்களுக்கு, அதுவும் தமிழர் மேற்கொள்ளும் சாத்வீகப் போராட்டங்களுக்கு எவ்விதம் மதிப்பளிக்கும் என்பதும்—

சிறையில் நடக்கும தமிழ்க் கைதிகளின் உண்ணுவிரதப் போராட்டங்களை அது எவ்வாறு நரித்தந்திரமாக முறியடித்து வந்தது என்பதும்— நாடறிந்த உண்மை என்பதாலேயே அவ்வாறு கூறி இருந்தோம்.

மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளில் அசையாத பற்றும், ஈடுபாடும் உள்ளவராக அடிக்கடி மேடைகளில் பீற்றி வரும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின அரசு—

இந்திய விடுதலைக்கு உழைத்த தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் நீண்டகாலத் தொடர்புடையவராகக் காட்டிவரும் ஜெயவர்த்தனாவின் அரசு —

எப்போதும் வெறும் பேச்சுப் பிரமாதமே அன்றி காந்தியப் போராட்டங்களைக் கவனத்தில்கொண்டு அவற்றுக்கு உரிய மதிப்பு அளிப்பதில்லை என்பதும் வரலாறறு உண்மைகளாகி விட்டன.

சாத்வீகப் போராட்டங்களுக்கு மதிப்பளித்து, சம்பந்தப்பட்டவர்களின் குறைவுகளுக்கு நிவாரணம் அளிககாமையால்தான, நாடு வன்செயல் கொத்தளமாக மாறி இருக்கிறது என்பதைச் சற்றும் பகுத்தறிய முடியாத நிலையில் அரசாங்கம் தடுமாறுகிறது.

எனினும், மக்களின் அமைதி வழியிலான எழுச்சிப் போராட்டங்கள், சனநாயகம், தாமிஷ்டம், அகிம்சை என்று வேடம் போடும் அரசாங்கத்தின் முகமூடியைக் கிழிக்கவாவது உதவும். உலக அரங்கில் தமிழர்களின் திக்கற்ற நிலையை எடுத்துச் சொல்ல உதவும்.

இந்தச் சிறுவிடயத்தில் கூடத் தமிழர்களுக்குச் சரியான முறையில் உதவ முடியாத இயலாத்தன்மை இந்தியாவுக்கு உண்டு என்பதையும், உண்ணுவிரதிகளுக்கு ஆதரவாக நடத்தப்படும் மக்கள் எழுச்சிப் போராட்டம் உலகுக்கு எடுத்துக் காட்டும்.

ஆகையால் பூஸா உண்ணுவிரதிகளுக்கு ஆதரவு தெரிவித்து, நல்லூரில் இன்று ஆரம்பமாகும் உண்ணுவிரதப போராட்டம் வரவேற்கத்தக்கது. கைதிகள் விடுதலை விடயத்தில் அரசு அசையும் வரைக்கும் உண்ணுவிரதம் தொடர மக்கள் ஆதரவு தேவை. இது ஒரு மனிதநேயப் போராட்டம் என உணர்ந்து சகலரும் தமது பங்களிப்பைச் செலுத்தவேண்டும்.

# ஐரிஷ் தீவிரவாதிகளின் பேட்டிகளை ஒலிபரப்ப பிரிட்டிஷ் வானொலி, டெலிவிஷன்களுக்குத் தடை

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

லண்டன், அக். 20

விடுதலை இராணுவ ஐரிஷ் தீவிரவாதிகளை பேட்டி கண்டு ஒலிபரப்புதவற்கு பிரிட்டனில் உள்ள வானொலி, டெலிவிஷன் நிலையங்களுக்கு தடை விதிக்கும் சட்டம் ஒன்று நேற்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் சட்ட மூலத்தை சமர்ப்பித்தார்.

ஐரிஷ் தீவிரவாதிகளின் பிரசாரத்துக்கு வானொலி, டெலிவிஷன் பாவிக்கப்படுதைத் தடுக்கவே இத்தடை கொண்டு வரப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளும், வானொலி நிலையங்களும் இத்தடையை 'வாய்ப்பூட்டு' என்று கண்டித்திருக்கின்றன. ஐரிஸ் விடுதலை இராணுவம் பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே. (எ)

# லெபனனில் கார்க்குண்டு வெடிப்பு ஏழு இஸ்ரேலிய வீரர் பலி!

கார்க்குண்டுத் தாக்குதலில் ஏழு இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் தென் லெபனனில் இடம்பெற்றது.

இதில் 8 வீரர்கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதலைத் தாங்களே நடத்தியதாக இஸ்லாமிய விடுதலை இயக்கம் ஒன்று உரிமை கோரியுள்ளது.

இத்தாக்குதலுக்கு பழிவாங்கப்படும் என்று இஸ்ரேலிய அரசு எச்சரித்துள்ளது. (எ)

1983 இல்

# யுத்த விளிம்பில் உலகம் இருந்தது! முன்னாள் சோவியத் உளவாளி தகவல்

லண்டன், அக்20

1983 இல் உலகம் யுத்தவிளிம்புக்கு சென்று திரும்பியது.

சோவியத் உளவாளியாக இருந்து பின்னர் பிரிட்டிஸ் புலனாய்வுப் பிரிவில் 10 ஆண்டுகள் பணியாற்றிய ஒலெக் கோர்டியேவ்ஸ்கியை ஆதாரம்காட்டி 'சண்டே டெலிகிராப்' பத்திரிகை முன்சண்ட செய்தியை வெளியிட்டது.

நேட்டோ நாடுகள் யுக்க ஒத்திகை ஒன்றை 1983 இல நடத்தின.

அது கிரெம்ளினில் பரபரப்பை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து மாஸ்கோவின் கே ஜி பி உளவுப் பிரிவு, அணு ஆயுதத் தாக்குதலை நடத்தத் தயாராக இருக்கும்படி தனது சகல பிரிவுகளுக்கும் உத்தரவிட்டது. அச்சமயம் சோவியத் தலைவராக செர்னன்கோவ் உடல் நலமின்றி இருந்தார்.

இப்படி அந்தப் பத்திரிகைச்செய்தி தெரிவித்தது. (எ)

### அடையாளம் காணப்பட்டனர்

புதுடில்லி, அக். 20

இந்தியாவில் இடம்பெற்ற இரண்டு விமான விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 80 பேர் அடையாளங் காணப்பட்டனர்.

ஆறு வெளிநாட்டுப் பிரசைகளும் உயிரிழந்தவர்களில் அடங்குவர். (எ)

### ரொக்கட் தாக்குதல்

காபூல், அக் 20

காபூல் விமான நிலையத்தின் மீது ஆப்கன் கெரில்லாக்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என்று காபூல் வானொலி அறிவித்தது. (எ)

### வெளி உலகில்

## பாகிஸ்தானிலும் தடை

இஸ்லாமபாத் அக் 20

'சைத்தானின் பாடல்கள் என்ற புத்தகத்துக்கு பாகிஸ்தான் அரசும் தடைவிதித்திருக்கிறது.

சால்மன் ருஷ்டி எழுதிய இப்புத்தகத்துக்கு இந்திய அரசு ஏற்கனவே தடைவிதித்து விட்டது.

இஸ்லாமிய மதத் தலைவர்களை புண்படுத்துவதாக இப்புத்தகம் அமைந்திருப்பதாக அதற்குக் காரணம் காட்டப்பட்டுள்ளது. (எ)

இந்தியாவில்

# வாக்களிக்கும் வயதை 18 ஆக குறைக்க காங்கிரஸும் முடிவு

புதுடில்லி, அக் 20

இந்தியாவில் வாக்களிக்கும் வயது 18 ஆகக் குறைக்கும்படி ஆளும் இந்திரா காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்து உள்ளது.

செயற்குழுக் கூட்டம் அண்மையில் புதுடில்லியில் கட்சியில் பிரதமர் ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது.

அப்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பிரிவினைவாதம், பயங்கரவாதம் ஆகிய வற்றை ஊக்குவிக்கும் அரசியல் அமைப்புக்கள் மீது தடைவிதிக்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வாக்களிக்கும் வயதை 18 ஆகக் குறைக்கும்படி கோரி ஆர்ப்பாட்டம் நடத்த முன் வருமாறு மாணவருக்கு ஜனதாதள் தலைவர் வி. பி. சிங் வேண்டுகோள் விடுத்து இருந்தது தெரிந்ததே. (எ)

# புதிய யுகம் தோன்றிவிட்டது

## அதுதான் "மக்களின் சேவகன் யுகம்"

### பிரதமர் பிரேமதாச கூறுகிறார்

கொழும்பு, அக் 21

இவ்வளவு காலமும் எமது தலைவர்கள் ஒரு வர்க்கத்தில் இருந்து தான் வந்தார்கள். அந்த யுகத்துக்கு முடிவு வந்திருக்கிறது. இப்போது புதிய யுகம் தோன்றியுள்ளது அது தான் மக்களின் சேவகன் யுகம்.

பிரதமரும் ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான திரு. ஆர். பிரேமதாச முன் கண்டவாறு தெரிவித்தார்.

கலிகமுவவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பிரதமர் பேசினார். அவர் மேலும் சொன்னதாவது;

இன்று நான் பிரதமர் மட்டுமே. டிசம்பரில் நான் நிறைவேற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் எனது சித்தாந்தங்கள், யோசனைகளை செயல் வடிவமாக்குவேன்.

நான் வைத்துள்ள முன்னுரிமைப் பட்டியலில ஒவ்வொரு மாணவனுக்கும் நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தை வைத்து உள்ளேன்.

அத்திட்டத்தின் மூலம் போஷாக்குச் சத்துக் குறைவை எதிர்த்துப் போரடுவோம்.

அது மட்டும் அல்ல, கல்வித்துறையில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வருவேன்.

இன்று எமது பல்கலைக் கழகங்கள் பட்டதாரிகளை உருவாக்கி வேலையற்றோர் பட்டியலிலே சேர்ந்து விடுகின்றன.

எனது கல்வித் திட்டத்தின்படி ஒவ்வொரு கிராமத்திலும் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.

நான் என்றுமே பொய் வாக்குறுதிகள் அளித்தது இல்லை; அப்படி அளிக்கப்போவதும் இல்லை

ஜனாதிபதி என்ற முறையில் நான் பிரதமர், நிதி அமைச்சர், அமைச்சர்கள், மத்திய வங்கியின் கவர்னர், திறை சேரிச்செயலாளர் ஆகியோரை நியமிப்பேன்.

இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டம் தேவை இல்லை என்று நான் தான் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன்.

புதிய வரவு செலவுத் திட்டத்தை எனது திட்டம், சிந்தனைக்கு ஏற்ப தயாரிப்பேன்.

இப்படி பிரதமர் சொன்னார். (இ-எ)

தென்பகுதி பிரச்சினை:

# சு. க. வின் உதவியைக் கோருகிறார் ரணில்!

கொழும்பு அக் 21

தென் மாகாணப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சுதந்திரக் கட்சி, அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் பேசுகையில அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மதவாச்சி எம். பி. மைத்திரிபாலசேனநாயக்காவின் கேள்விஒன்றுக்கு பதிலளிக்கையில்—

''படுகொலை நடந்த மாகொஸ்சந்த கிராமத்துக்கு பாதுகாப்பு வழங்க ஊர்காவல்படையினர் நியமிக்கப் பட்டுள்ளனர்''

—என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார். (ஒ-எ)

# ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்கக் குழு?

லண்டன் அக் 20

டிசம்பரில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை மேற்பார்வையிட கண்காணிப்புக்குழு ஒன்றை நிறுவும் விஷயமாக கொழும்பு அரசு, லண்டனில் உள்ளகாமன் வல்த் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு உள்ளது.

'பார் ஈஸ்டர்ன் இகொனமிக் ரிவ்யூ' தனது பிந்திய இதழில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

உத்தியோகபற்றற்ற முறையிலேயே இலங்கை அரசு தொடர்புகொண்டுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கிறது. (உ-எ)

### பிள்ளையாரின் அங்கி திருட்டு

யாழ்ப்பாணம், அக்21

ஆனைக்கோட்டை கூழாவடி புக்கை தின்னிப் பிள்ளையாரின் கவச அங்கி இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம்திகதி இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

மேற்படி ஆலயத்தின் கதவுகளை உடைத்து உட்சென்ற கொள்ளையர் மூல விக்கிரகத்தைப் புரட்டி இயந்திரத் தகட்டையும் திருடியுள்ளனர்.

அதன் பின்னர் விநாயகருக்கு அணியப்பட்டிருந்த அங்கியையும் திருடிச் சென்றுள்ளனர். (ஒ 10)

### ஜனாதிபதித் தேர்தல்டிச. 19இல்

ஜனாதிபதித் தேர்தல் பெரும்பாலும் டிசம்பர் 19 ஆம் திகதி நடத்தப்படும் என்று தெரியவருகிறது.

இத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 10 ஆம் திகதி தாக்கல் செய்யப்படும். (உ-எ)

# வாழ்வின் உயிர்நாடி பூசை வழிபாடுதான்

யாழ்ப்பாணம் அக் 21

''வழிபாடு என்பதன் பொருள் என்ன? ஏன் வழிபாடு செய்யவேண்டும்? பல நாட்களாக முன்னேற்பாடு செய்து பணத்தையும் செலவு செய்து பாடசாலைகளில் நவராத்திரிவிழா நடத்த வேண்டுமா? இது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். சமயத்தின் உயிர் நாடியாகவும் அதன் சாராம் சமாகவும் இருப்பது வழிபாடே''.

இவ்வாறு கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயத்தில் நடைபெற்ற நவராத்திரி பூசை வழிபாட்டு நிகழ்ச்சியில் அதிபர் திரு. கா. கணேசராசன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்;

மனித வாழ்க்கைக்கு உயிராய் அமைந்தது பூசை வழிபாடு தான். சமய ஒழுக்க வரம்பின் பிரகாரம் தான் வாழ்வு சுபீட்சம் பெறும். மகிடாசுரனை சங்கரித்த அன்னை தமது துன்பங்களை எல்லாம் சங்காரம் செய்து நம்மை ஆன்ம ஈடேற்றம் பெறச் செய்வாள் என்றார்.

திரு. இ. ஸ்ரீதரன், செல்வி. க. மனோஹரி ஆகியோரின் சிறப்பு நிகழ்ச்சியாக ''நவராத்திரி மகிமை'' என்ற கதாகாலட்ஷேபம் இடம் பெற்றது.

சிவபக்தர் திரு. மெய்ஞானசுந்தரம் அவர்களது கூட்டு வழிபாட்டுடன் விழா இனிது நிறைவெய்தியது. (இ)

# புங்குடுதீவில் கருத்தரங்கு

புங்குடுதீவு, அக். 21

புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் சமநலசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் தலைமையில் வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்குப் பரிசில் வழங்குதல் பற்றிய கருத்தரங்குஒன்று நடைபெறவுள்ளது.

வீட்டுத்தோட்ட விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கங்கள் பற்றியும் அதனால் விவசாயிகள் பெறக்கூடிய நன்மைகள் பற்றியும் ஆணையாளர் விளக்கிக் கூறவுள்ளார். (இ-131)

### சித்திரத் தேர் அச்சேற்று விழா

யாழ்ப்பாணம், அக 21

கல்வயல் அருள்மிகு வேதவன விநாயகர் ஆலய புதிய சித்திரத் தேர் அச்சேற்று விழா இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணி முதல் விநாயகர், சந்தான கோபாலர், சுப்பிரமணியர், வைரவர் ஆகியோருக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்று 8 மணிக்கு மேல் தேர் அச்சேற்று வைபவம் நிகழும்.

அதையடுத்து ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் பட்டிமண்டபம் ஆரம்பமாகும்.

''சமூகப் பார்வையில் ஆன்ம ஈடேற்றத்துக்கு ஆலயத் திருப்பணிகள்'' எனும் பொருளில் நடைபெறும் இப்பட்டி மண்டபத்துக்கு கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் நடுவராக இருப்பார்.

அவசியம் என்ற தலைப்பில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் திரு அகளங்கன், திரு. சிவகுமாரன் ஆகியோரும் அவசியமில்லை என்ற தலைப்பில் திரு. சோ. பத்மநாதன் திரு க. நாகேஸ்வரன் திரு. இ. திருநந்தகுமார் ஆகியோரும் வாதிடுவர்.

இவ் ஆலய சித்திரத் தேர் சிற்பகலாவல்லுநர் திரு. இ. கலாமோகனால் நிர்மாணஞ் செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-75)

### கோகுலாலயம் திறப்பு விழா

யாழ்ப்பாணம், அக் 21

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் திருவெள்ளாறை இலஞ்சிபாரணிய(ம்) குமரகோட்டத்தில் இன்று 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8மணியளவில் கோகுலாலய விழா நடைபெறவுள்ளது.

விழா நிகழ்ச்சிகளில் முதலாவதாகக கிரியைகள் இடம் பெறும் ஆலய விசேட பூசையை அடுத்து கோகுல ஆலயப் பிரவேசம், கோ பூசை, பொங்கல் முதலியன நடைபெறும்.

இரண்டாவதாக பொருளுரை இடம் பெறும் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையுரை நிகழ்த்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்க விழா ஆரம்பமாகி—

'அரச நீதியும் கோகுலமும்' எனும் தலைப்பிலசைவப் புலவர் திருநாவுக்கரசு, திரு. சுந்தரம் பிள்ளை ஆகியோரும 'நாட்டில் பசுவளர்த்தலும் திட்டமிடலும்' எனும் தலைப்பில திரு. த. நவரத்தினராசாவும் 'பசுவின் பெருமை' பற்றி கல்வயல் குமாரசாமியும் 'வேதாகம புராணங்களில் கோகுலம்' புலவர் குமாரசாமியும் பொன். சரவணமுத்துவும் 'பசு வளர்த்தலில் பொருளாதாரமும் அரச நீதியும்' என்ற பொருளில் டாக்டர் கே. சி. சோமபாலாவும் உரையாற்றுவர்.

அதையடுத்து பக்திப் பாடல்களும் பஜனையும் இடம்பெறும். (ச-75)

# திருத்தப்படாத வீதிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வீதிகள் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் உள்ளன.

குறிப்பாக முள்ளியவளையில் முதலாம், இரண்டாம், மூன்றும், நாலாம் வட்டாரங்களிலும் தண்ணீர் ஊற்றுப் பகுதியில் கணுக்கேணி, மாமூலை, நீராவிப்பிட்டி, ஆகிய கிராமப் பகுதிகளிலும் இந்நிலை காணப்படுகிறது. (ச-94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100gr/ பக்கட்டுக்களில் வெளி வருகிறது.

1 பக்கட்விலை 10/- ரூபா வியாபாரிகளுக்கு விசேட கழிவுகொடுக்கப்படும்.

**அண்ணு கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்.



# உதயன்

21 - 10 - 1988 வெள்ளிக்கிழமை



உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு

**அண்ணு கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி- சபிண்டீகரண அழைப்பும்



அமரரான எங்கள் அன்புத் தெய்வம்

உயர்திரு
**பொன்னம்பலம் செல்லத்துரை**

தோற்றம்: 10- 7- 1930 மறைவு: 21 09- 1988

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 21- 10- 1988 வெள்ளிக்கிழமை காலை அனலை தீவுத் தீர்த்தக்கரையிலும் சபிண்டீகரணம் அன்றைய தினம் இல்லத்திலும்நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள், சகோதரர்கள்.

5ஆம் வட்டாரம்,
ஐயனார் கோவிலடி
அனலைதீவு.
(7376)

**செயற்படுகிறது**

முல்லைத்தீவுக் கச்சேரி சென்றவாரம் ஸ்தம்பித மடைந்திருந்தது.

எனினும் மீண்டும் இவ் வாரம் அது செயற்படத் தொடங்கியுள்ளது. (ஒ-113)

**பல்கலைக்கழக..,.**

[1-ம்பக்கத்தொடர்ச்சி)
கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

கடந்த வருடம் அக்டோபரில் நடந்த இராணுவ நடவடிக்கையின் போது 6 பல்கலைக் கழக மாணவர்கள் மரணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## சனியன்று இல்லை

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப் பட்டுவரும் அதிபர் தரம் I, II; III க்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற மாட்டா.

ஏற்கனவே திட்டமிட்டபடி இறுதி வகுப்புகள் 23, 24 ஆம் திகதிகளில் வழமை போல் நடைபெறும் என இ. த. ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மாசிலம் தெரிவித்தார். (ஒ)

## சாவகச்சேரியில்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
நிலவியது

நகர்ப்புறத்தை சுற்றி வளைத்த அமைதிப் படையினர் பலரைத் தடுத்துவைத்துசோதனைகளையும், விசாரணையையும் மேற்கொண்டனர். கண்டி வீதியில் நுணுவில் சந்தியிலிருந்து சாவகச்சேரி வைத்தியசாலை வரையான பகுதிபோக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டது.

போக்குவரத்துகள் யாவும் உள்ளூர்ப்பாதை வழியாகத் திருப்பிவிடப் பட்டன.

எனினும் நேற்றும் பிற்பகலில் சாவகச்சேரிப் பகுதி ஊடாக போக்குவரத்துகள் அனுமதிக்கப்பட்டன.

அதே சமயம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் கனகரத்தினம் முருகதாஸ் (8 வயது) அரியகுட்டி தர்மலிங்கம் (76 வயது) ஆகியோர் ஆவார்.

மேலும் காயமடைந்த சிலர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாக அறிய வருகிறது.

இதற்கிடையில் தூரதர்ஷன் தனது நேற்றைய செய்தி அறிக்கையில் சாவகச்சேரியில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தது. (இ-9)

## நிவாரண...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
சாலையில் வைத்தும் விநியோகிக்கப்பட உள்ளது

நாளை 22 ஆம் திகதி கொக்குவில் மேற்கு, கிழக்கு, மத்தி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலும்-

நாளை மறுதினம் 23 ஆம் திகதி வண்ணார் பண்ணை கிழக்கு, மேற்கு பகுதியினருக்கும் கந்தர்மடம் பகுதியினர்க்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைத்தும் படிவங்கள் விநியோகிக்கப் பட உள்ளன.

இந்தப் படிவங்களை இம் முறைபெறத்தவறுபவர்களுக்கு வேறு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என வலியுறுத்தப்பட்டது. (ஒ-9

## 23 ஆம்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
ளின் வீடுகள் சேதம் அடைந்திருப்பின் அதைத்திருத்துவதற்கும் வீடுகள் இல்லாதவர்களுக்கு சொந்தத்தில் காணி இருந்தால் புதிதாக வீடமைப்பதற்கும், மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்தால் அத்தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உதவியும் வழங்கப்பட உள்ளன-

இவைகள் இம்மாதம் 15ஆம் திகதிநாடு திரும்பியவர்களுக்கு எதிர் வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையிலும் இம்மாதம் 18 ஆம்திகதி நாடு திரும்பியவர்களுக்கு 24 ஆம் திகதி திங்கட்கிழமையிலும் யாழ் செயலகத்தில் வைத்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் காலை 9 - 00 மணி தொடக்கம் பிற்பகல் 1-00 மணிவரை வழங்கப்படும்.

இவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தமது அடையாள அட்டையுடனும் இந்திய அரசினால் வழங்கப்பட்ட அகதிகள் பதிவுக் காட்டுடனும் ரூபா 1/- பெறுமதியான முத்திரையுடன் சமுகமளிக்குமாறு சம்பந்தப்பட்ட அகதிகள் குடும்பத்தின் தலைவர் ... (இ)

## ஓராண்டு நினைவலைகள்



**திருமதி வரதலட்சுமி சிவகுருநாதன்**
அவர்களும் அவரது அன்புச் செல்வங்களும்
**செல்வி கோமதீ, செல்வி கிரிஜா,**
**செல்வன் கிரிதரன், செல்வன் ஜெயதரன்**
**செல்வன் உதயாகரன்**

வரதலட்சுமியின் தோற்றம்: 6-8-1946
அநியாய அழிப்பு: 21-10-1987

பிள்ளைகள் ஐந்தின் அநியாய அழிப்பு: 17-10-1987

"பெற்ற பாசத்தை வெறும் தும்பாகவும்
பாழும் சொத்தையே பெரும் தூணாகவும்
மதித்து வாழும் மாந்தர்கள் மத்தியில்
வாழ்வது கொடுமை என்றெண்ணி இறைவனடி ஏகினீரோ?
பாசச் செல்வங்கள் ஐந்தும் அன்புத் தாயும்"

எமது குலவிளக்கு வரதலட்சுமியுடன் ஐந்து குலக் கொழுந்துகளும் ஒன்றாக இணைந்து உங்களது வாழ்க்கையின் இறுதிப்பயணத்தை முடித்துக்கொண்டீர்களோ?

எங்களுடன் எந்நாளும் பாசத்துடனும், அன்புடனும் பழகிய உங்களைப் பிரிந்து மீளாத்துயரில் ஆழ்ந்துள்ளோம். உங்களது ஆத்மாக்கள் சாந்தியடைய நாங்கள் இம் மண்ணை விட்டு அகலும் வரை ஆண்டவனைப் பிரார்த்திப்போம்

அலைகடல் வற்றினாலும் உங்கள் அன்புக்கடல் வற்றாது
உங்களை நினைந்து எந்நாளும் துயருறும்,
அம்மா, அம்மம்மா, தம்பி, மாமா,
மைத்துனி, மாமி, மருமக்கள், மச்சான்மார்,
மற்றும் உறவினர், நண்பர்கள்.

தனபாலசிங்கம்,
அம்மன் றோட்,
உரும்பராய் தெற்கு, உரும்பராய். (7359)


## பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

சவூதி அரேபியா குவைத் மற்றும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு

### (1) சவூதிஅரேபியா

லேபரர்ஸ் 350 + 100
கிளீனேர்ஸ் 350 + 100
மீன் பிடிப்பாளர் 900 + 150
(குறிப்பு:- நல்ல அனுபவமுள்ள மீன்பிடிப்போர் 5 பேர் உடனடியாகத் தேவை)
உடன் தொடர்பு கொள்ளவும்

### (2) கப்பலில் வேலைவாய்ப்பு

சம்பளம் 500 U. S. Dollar
உணவு வசதிகள் பிரத்தியேகம்
ஒரு வருட ஒப்பந்தம்

குறிப்பு:
மேற்படி கப்பல் கனடா, அமெரிக்கா, இலண்டன், அவுஸ்திரேலியா மற்றும் நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

### (3) குவைத்

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் 35 டினுர்
வீதிச் சுத்திகரிப்பாளர்
[வயது 18 க்கு மேல்]

சென்ற 40 நாட்களுக்குள் சவூதி, குவைத் சென்றோர்களின் பெயர்கள் பின்வருமாறு.

N. சிறீஸ்கந்தராசா, ஏழாலை
S. சுப்பிரமணியம், நவக்கிரி
A. T. சிவசுப்பிரமணியம், குப்பிளான்
S. செல்வேந்திரன், நீர்வேலி
G. செல்வநாயகம், மானிப்பாய்
N. நித்தியகரன், குப்பிளான்
K. நாகேஸ்வரன், உரும்பராய்
V. சிவசோதி, உரும்பராய்
K. கணேசலிங்கம், குப்பிளான்
S. ராசநாயகம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு
S. தேவராசா, உடுப்பிட்டி
A. சிவபாதம், கீரிமலை
S. பாஸ்கரன், குப்பிளான்
K. ரவிச்சந்திரன், வசாவிளான்
K. உதயகுமார், ஊரெழு
K. தர்மதேவன், கீரிமலை
P. சேதுநாதன், உடுப்பிட்டி
S. சந்திரசேகரம், உடுப்பிட்டி
K. தர்மராஜா, உடுப்பிட்டி
A. கணபதிப்பிள்ளை, குப்பிளான்
N. திருநாவுக்கரசு, குப்பிளான்
R. சிவராசா, உடுப்பிட்டி
K. லோகநாதன், உடுவில்
E. சுந்தரலிங்கம், குப்பிளான்
M. அருந்தவராசா, உடுப்பிட்டி
V. S. சந்திரன், வசாவிளான்
R. ரவிச்சந்திரன், மயிலங்காடு
K. சிவஞானம், மயிலங்காடு
M. சந்திரகுமார், குப்பிளான்
S. தங்கராசா, குப்பிளான்
R. ரவிச்சந்திரன், குப்பிளான்
S. சதிஸ்குமார், வசாவிளான்
T. செல்வேந்திரன், வசாவிளான்
S. S. சிறீகரன், கிளிநொச்சி
T. ஜெகதீஸ்வரன், மயிலங்காடு
R. ரவீந்திரன், வசாவிளான்
T. வரதராசா, புத்தூர்

இம் மாதத்தில் மேலும் பலர் பிரயாணம் செய்ய இருக்கின்றார்கள்.

தொடர்பு:
**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
**புகையிரதநிலைய வீதி, சுன்னாகம்.**
**குப்பிளான் வல்வெட்டி**
(C 643)


## நாளைய சஞ்சீவியில்

- ★ ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தாய் இலக்கியக் கட்டுரை
- ★ அமெரிக்காவில் பரவி வரும் சைவ உணவு மோகம்.
- ★ அன்பைத்தேடி-சிறுகதை
- ★ வாழ்க்கையில் வெற்றிகாணுவது எப்படி? - உளவியல் கட்டுரை
- ★ வ. உ. சி எழுதிய வைத்தியநூல்
- ★ பெண்ணிடம் ஏமாந்த அதிபர் எவர்?
- ★ பாடம் பயில்வோம்
- ★ நூற்றாண்டு விழா கண்ட ஹொலிவூட் சினிமா
- ★ தரவிருத்தியை நோக்கி கல்விச் சீரமைப்பு
- ★ பாண்டிய மன்னனுக்கு வள்ளுவர் அளித்த விளக்கம்!
- ★ ஜுனஜோ-பெனாசிர் மோதல் -உலகஉலா
- ★ மற்றும் வழமையான சுவையான அம்சங்களுடன்


**குறைந்த விலை! சிறந்த தயாரிப்பு!**

✶ உங்கள் உள்ளங்களை
✶ கொள்ளை கொள்ளும்
✶ வண்ண வண்ணடிசைன்களில்

**இதோ!**

வெளி வந்து வேகமாக
விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது

**சீவம் இண்டஸ்றீஸாரின்**

✶ புத்தம் புதிய நவீன
✶ டிசைன்கள் உள்ளடக்கிய

**தீபாவளி வாழ்த்து மடல்கள்**

(நவீன கட்டிங் டிசைன்கள் உள்ளடக்கியது)
தொடர்பு கொள்ளவும் :

**சீவம் இண்டஸ்றீஸ்**
மாவிட்டபுரம் கிழக்கு,
**தெல்லிப்பளை.** (7287)


## மரண அறிவித்தல்கள்

### மரியதாஸ் கோகுலவாசன்

(வாசன்)

பிரேம் என்று அழைக்கப்படும் மரியதாஸ் கோகுலவாசன் [வாசன்] அகால மரணமானார். இவர் திரு மரியதாஸ் திருமதி ருக்மணி மரியதாஸ் ஆகியோரின் அன்பு மகனும், தனபாலன், குகஸ்ரீ, தயாளன், குணாளன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மேற்கு ஆடியபாத வீதியில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.
கா. சண்முகநாதன்

### திருமதி தி. சுந்தரம்

மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திரேசம்மா சுந்தரம் காலமாகிவிட்டார்.

அன்னார்6ஆம் வட்டாரம்புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு சுந்தரத்தின் அன்பு மனைவியும் சோமசுந்தரம் (கபே டீலக்ஸ், யாழ்ப்பாணம்) சுந்தரலிங்கம் (ஜேர்மனி), சிவபாதசுந்தரம் (ஆசிரியர் உயரப்புலம் M. M. T. M. S. ஆனைக்கோட்டை) கனகசுந்தரம் (பிரான்ஸ்), சுந்தரேஸ்வரி (கனடா), சுந்தரவதனி (ஜேர்மனி), சுந்தரலட்சுமி, பாலசுந்தரம் (பிரான்ஸ்) குணசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் தனபாக்கியலட்சுமி தயாநிதி (ஜேர்மனி) தனலட்சுமி, சோமகலா (பிரான்ஸ்) புகனேந்திரராசா (கனடா) மோகனராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியாரும், சுகிர்தன், சுஜீத்திரா, பிரதீப், பிரமிளா, இந்துஜன், சுபஸ்திகா, கார்த்திகா, ஜசினு, அஸ்வினி, மதி மயூரி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று வெள்ளிக்கிழமை (21-10-88) பகல் 11 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்

தகவல்;
சு. சோமசுந்தரம்.
77, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (7513)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21- 10- 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 21st October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org